1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 43-ம இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

மப்புமந்தாரம் அதிகமாகநீங்கிச் சில நாள் வெயில் எறித்துக்கொண்டுவந்து, இன்று மறுபடியும் அதிக மழைக் கோலம் காணப்படுகிறது. பலவிடங்களில் வெள்ளம் இன்னும் வற்றியபாடில்லே.

### யாழ்ப்பாணநகர மேயர்

தற்போது யாழ்ப்பாணநகர மேயராய் இருந்துவருகிறவரும், யாழ்ப்பாணப் பட்டினசங்கத்திலும், யாழ்ப்பாண நகரசபையிலும் இருபதுவருடகாலம் அங்கத்தவராயிருந்து சேவை புரிந்துள்ளவருமான திரு. சாம் ஏ. சபாபதிஅவர்கள் இம்முறை நகரசபைத் தேர்தலில் திரும்பவும் அபேட்சகராக முன்வராது நின்றுவிட்டமை வருந்தத்தக்கதாகும். தற்போதைய நகரசபையிலே 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. பி. எம். ஜோண, 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஜி. நல்லையா, 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. குகதாசன், 15-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஏ. ஜே. சுவாம்பிள்ளை என்பவர்களும் திரும்பவும்தேர்தலுக்கு அபேட்சகராக முன்வரவில்லை.

### யாழ்ப்பாணநகரசபைத்தேர்தல்

சமீபத்தில் நடந்தேறவிருக்கும் யாழ்ப்பாண நகரசபைத் தேர்தலுக்கு அபேட்சகராக முன்வந்திருப்பார் தங்கள் நியமனப்பத்திரங்களைச் சென்ற சனிக்கிழமை சமர்ப்பித்திருக்கின்றனர். பன்னிரண்டாம் வட்டாரத்திற்கு வழக்கறிஞர் காதி எம். எம். சுல்தான் அவர்கள் தொடர்ந்து மூன்ரும்முறையாகப் போட்டியின்றித் தெரியப்பட்டிருக்கின்றூர். ஏனையபதினுன்கு வட்டாரங்களுக்கும் போட்டியிலே தேர்தலுக்கு முற்பட்டிருப்பவர்களின் நாமங்களும், அவர்களின்வட்டாரங்களும் வருமாறு :

1-ம் வட்டாரம் : திரு. அல்பிறெட் சுவாம்பிள்ளை—தற்போதைய அங்கத்தவர் (அடையாளம் குடை), எஸ். எவ் எக்ஸ். அண்ணுசாமிப்பிள்ளை (சைக்கிள்), திரு. ஐ. எஸ். இராசநாயகம் (யானை).

2-ம் வட்டாரம் : திரு. எம். எஸ். பிரான்சீஸ் சேவியர் (திறப்பு), திரு. ஆபிரகாம் யோசேப் (சைக்கிள்).

3-ம் வட்டாரம் : திரு. ஈ. கே. நெவின்ஸ் செல்லத்துரை (நட்சத்திரம்), திரு. எம். ஜேக்கப் (சைக்கிள்).

4-ம் வட்டாரம் : திரு. அல்பிறெட் ரி. துரையப்பா—உதவிமேயர் (திறப்பு) திரு. ஜி. ஜே. செபஸ்தியாம்பிள்ளை (சைக்கிள்).

5-ம் வட்டாரம் : திரு. பி. காசிப்பிள்ளை — தற்போதைய அங்கத்தவர் (சைக்கிள்), திரு. பி. நடராசா (யானை).

6-ம் வட்டாரம் : திரு. எஸ். சி. மகாதேவா (சைக்கிள்), திரு. ஐ. எஸ். சண்முகநாதன் (திறப்பு), திரு. வி. ஐயாத்துரை (நட்சத்திரம்), திரு. எஸ். நடராசா (யானை).

7-ம் வட்டாரம் : திரு. கே. துரைசிங்கம் — தற்போதைய அங்கத்தவர் (யானை), திரு. ஏ. நடராசா (சைக்கிள்).

8-ம் வட்டாரம் : திரு. ஏ. துரைராசசிங்கம் — தற்போதைய அங்கத்தவர் (நட்சத்திரம்), திரு. வி. கனகசபாபதி (சைக்கிள்)

9-ம் வட்டாரம் : திரு. எஸ். நவரத்தினம் — தற்போதைய அங்கத்தவர் (திறப்பு), திரு. கே. ஐயாத்துரை (நட்சத்திரம்).

10-ம் வட்டாரம் : திரு. ரி. எஸ். துரைராசா—தற்போதைய அங்கத்தவர் (குடை), திரு. எஸ். கார்த்திகேசு (திறப்பு).

11-ம் வட்டாரம் : ஹாஜி வி. எம். எம். அபுசாலி — தற்போதைய அங்கத்தவர் (யானை), ஜனுப் எஸ். ஹபீப் முகம்மது (சைக்கிள்).

12-ம் வட்டாரம் : திரு. காதி எம். எம். சுல்தான்—தற்போதைய அங்கத்தவர்.

13-ம் வட்டாரம் : திரு. எஸ். இராசரத்தினம் (திறப்பு), திரு. வி. தேவேந்திரன் (சைக்கிள்), திரு. எம். பாலசிங்கம் (யானை).

14-ம் வட்டாரம் : திரு. ஆர். சி. மன்மதராயன்—தற்போதைய அங்கத்தவர் (சைக்கிள்), திரு. சி. முத்துத்தம்பி (யானை).

15-ம் வட்டாரம் : ஈ. ரி. ஹிச்கொக் (சைக்கிள்), திரு. ஜே. எஸ். நிக்கலஸ் (குடை), திரு. ஐ. ஆர். அரியரத்தினம் (திறப்பு), திரு. ஏ. விசுவநாதன் (நட்சத்திரம்).

தேர்தல் மார்கழிமாதம் 4-ந் திகதி சனிக்கிழமை நடந்தேறும்.

### யுத்தங்களின் ஞாபகதினம்

1914-ம் ஆண்டுமுதல் 1918-ம் ஆண்டுவரையிலும், 1939-ம் ஆண்டுமுதல் 1945-ம் ஆண்டுவரையிலும் நடைபெற்ற இரு யுத்தங்களினதும் ஞாபகதினமாக இம்மாதம் 7-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கப்படவிருக்கிறது. அன்று தினம் வழமைபோல இலங்கைமுழுவதிலும் அவ்விருயுத்தங்களிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து பகல் 11 மணிக்கு இருநிமிஷ மௌனம் காக்கப்படும்.

### அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள்

அடுத்தவருட ஆரம்பமுதல் இலங்கையருக்கும், இலங்கையர் அல்லாத பிறநாட்டினருக்கும் வெவ்வேறு நிறமான மேல்அட்டைகளுள்ள அரிசிக்கூப்பன் புத்தகங்கள் வழங்கப்படவிருக்கின்றன. இந்தவருடக் கடைசிவாரத்துடன் தற்போதைய கூப்பன் புத்தகங்கள் பூர்த்தியாகிவிடும். புதியகூப்பன் புத்தகங்கள் ஒன்றரை வருடகாலம் பாவிப்பதற்குப் போதியன. தற்போது பாவனையிலிருந்துவரும் கூப்பன்புத்தம்க ஒருவருடத்துக்கு மாத்திரமே போதியதாகும். இந்தஆண்டின் அரிசிவிலைகளின்படி, அரசாங்கம் ஒருகொத்து அரிசி 75 சதமாகவாங்கி 55 சதத்துக்கு விற்றுவருகின்றது. இந்தவிலைவிகிதம் அடுத்தவருட ஆரம்பம்வரையில் நிலைத்திருக்குமெனத் தெரியவருகிறது.

### வெற்றிக் கேடையப் பரிசில்

நிகழும் 1954-ம் ஆண்டுக்காக வடமாகாண சங்கீதவிழாப்போட்டி சென்ற சனிக்கிழமை நடந்து, அதிலே நாவாந்துறைக் கத்தோலிக்க பாடசாலை "ஐந்து ரூபா" என்னும் நாடகத்திற்கு முதல்பரிசாக வடமாகாண வெற்றிக் கேடையப் பரிசிலைப் பெற்றிருப்பதாக அறிந்து சந்தோஷமானேம்.

### தினமான விமானசேவை

கொழும்புக்கும், காங்கேசன் துறைக்குமிடையிலே நாளாந்த ஆகாயவிமானப் போக்குவரத்துச் சேவை நடத்த வேண்டுமென்று எயர்சிலோன் கம்பெனிநிர்வாகிகள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சேவை வருகிற மார்கழிமாதம் 1-ந் திகதிமுதல் ஆரம்பமாகவிருக்கிறது.

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி

இலங்கையிலே சென்றஐப்பசிமாதத்தில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை 101·3. முந்திய புரட்டாசிமாதப் புள்ளித்தொகை 100·5. சென்றமாதத்திலே எலுமிச்சம்பழம், ஈரவெங்காயம், மீன்ஆதியன விலையேறியமையே புள்ளித்தொகை அதிகரிக்கக் காரணமென்று சொல்லப்படுகிறது.

### வண. பெயிற்றன்சுவாமியார்

அமெரிக்க குடும்பசெபமாலைப்படையணியின் அப்போஸ்தலரான வண. பற்றிக் பெயிற்றன் சுவாமியவர்கள் சமீபத்திலே இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மாஎனும் நான்குநாடுகளையுஞ் சேர்ந்த பிரதான நகரங்களில் நடந்தேறவிருக்கின்ற நாற்பது பெரிய கூட்டங்களில் சொற்பொழிவாற்றவிருக்கின்றூர். பம்பாய் அதிமேற்றிராணியாரான கருதினல் கிறுசியாஸ் ஆண்டவரது அழைப்பின்பேரிலே சுவாமியவர்கள் வருகிற மார்கழி 8-ந் திகதிக்குமுன் இந்தியாவந்து சேருவாரென நம்பப்படுகிறது.

### நான்காவது உதைபந்தாட்டம்

திரு. சி. எஸ். நாயகம்அவர்கள் சங்மானித்த பாத்திமாகேடயத்தை ஈட்டிக்கொள்வதற்கான நான்காவதுஉதைபந்தாட்டப்போட்டி சென்ற 1-ந்திகதி திங்கட்கிழமை சாயந்தாம் சம்பத்திரிசியார்கல்லூரி மாணவர்கோஷ்டிக்கும், ஊர்காவற்றுறை சந்தந்தோனியார்கல்லூரி மாணவர்கோஷ்டிக்கு மிடையே சந்தந்தோனியார் கல்லூரிமைதானத்தில் நடைபெறலாயிற்று. இதில் சம்பத்திரிசியார் கல்லூரிக்கோஷ்டி ஐந்து கோல்கள் எடுத்தது. அந்தோனியார் கல்லூரிக்கோஷ்டி ஒன்றுமே எடுக்கவில்லை. அதனல் பத்திரிசியார் கல்லூரிக்கோஷ்டிக்கே வெற்றியாயிற்று.

### மிஷனரிமார்கள் நல்லவர்கள்

புத்தவிசாரணைக்கம்மிஷன் மாத்தளையிலே சமீபத்தில் தனதுவிசாரணையை நடத்துமுன் அந்தக்கம்மிஷனில் ஓர்அங்கத்தவரான ஏ. தம்மானந்த தெரோஎனும் புத்தகுருநிகழ்த்திய ஆரம்பஉரையிலே : "கிறீஸ்துவ மிஷனரிமார்கள் நல்லவர்கள் ; புத்தர்கள்செய்யப் பாடுபடும்அளவாக அவர்களும் தங்கள்சமயத்தைப் பரப்புவதாலே தங்கள்கொள்கைக்கிணங்க மக்[illegible]செய்ய முயற்சிக்கிறூர்கள் ; அவர்களுடன் எனக்கு ஒருவித சச்சரவுமில்லை ; ஆனல், புத்தர்கள் செய்யவேண்டியது யாதெனில், இவர்கள் தங்கள்பெருமைகளைக் கைவிட்டுத் தங்களுடையசமயத்தைப் பரப்புவதற்கு ஒன்றுசேர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டு" மெனக் கூறலாயினர்.

### நீர் என்ன செய்தீர் ?

ஐக்கியதேசிய கட்சியின் குருநாகல் கிளைக் கூட்டம்ஒன்று அங்கு மாலியதேவகல்லூரியில் நடைபெற்றபோது, பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையில் குருநாகற்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. டி. பி. வெலகெதிர அவர்கள் இரண்டரைவருடங்களுக்கு முன் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப் பட்டதுமுதல் குருநாகற்பட்டணத்துக்கு என்னசெய்தார்? என்றகேள்வி அவரிடம் கேட்கப்படலாயிற்று. இவ்விதம்கேட்ட திரு. ரி. ஏ. டி. சாள்ஸ்என்பவர் தான் ஐக்கிய தேசியகட்சியில் ஓர் அங்கத்தவரென்றும், குருநாகற்பட்டணம் அசட்டையாகவிடப்பட்டு வருகிறதென்று சனங்கள் பலமுறை தனக்குச் சொன்னூர்களென்றும் அவ்வேளை தெரிவிக்கலாயினர். சனப்பிரதிநிதிகள்சபையிலுள்ள மற்றும் அங்கத்தவர்களுள் ஒவ்வொருவரிடமும் இந்தக்கேள்வி கேட்கப்பட்டாலோ !

### அர்ச். கிறகோரியாரின் நைற்பட்டம்

வெண்ணுப்புவாவைச் சேர்ந்தவரும் பிரபலகத்தோலிக்க பிரமுகருமான திரு. ஜோண யோசெவ் பெர்னுண்டோஅவர்கள் ஆற்றியுள்ள சமய சேவைகள்—சமூகசேவைகளைப் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் அர்ச். பெரிய கிறகோரியாரின் நைற்பட்டம்வழங்கி அவரைச் சங்மானித்திருக்கின்றூர். ஓர்சிறந்த கத்தோலிக்கரான இவர்தந்தையார் திருச்சபைக்குஆற்றிய பரோபகார தொண்டுகளுக்காகப் "பெனெமெறென்ரி" எனும் மகிமைவிருது சங்மானிக்கப் பெற்றிருந்தவர். சலாபப் புதியமேற்றிராசனம் வகுக்கப்பட்டதுமுதல் செவாலியர் பெர்னுண்டோ அவர்கள் அம்மேற்றிராசனத்தில் மிகப் பெரியதான தமது விசாரணைப்பங்கில் நடைபெறத்தொடங்கிய சகலமுயற்சிகளுக்கும் முதன்மைவகித்து, மேற்றிராணியாண்டவரால் தொடக்கப்பெற்ற ஒவ்வோர் விசேஷப்பட்ட கருமத்தையும் உதாரசிந்தையுடன் ஆதரித்துவந்திருக்கின்றூர். தமது சகோதரர்களின் உதவியோடு வெண்ணுப்புவாவிலே ஆசீர்வாதப்பர்சபைக் கன்னியாஸ்திரீமாருக்கெனச் சென்ற் எலென் கன்னிகாமடத்தைக் கட்டினூர். யோசேவாஸ் கல்லூரியையும், லான்சிகாமாவிலே வறிஞர்களுக்கான வயோதிகர் சாலையையும், மாறுவிலிலே அர்ச். பாவிலுவானவர் குருமடத்தையும் அமைப்பதற்கென்று இவர் பெருந்தொகைப்பணம் உபகரித்திருக்கின்றூர். தமதுவிசாரணைப்பங்கிலுள்ள ஒரு பெருந்தொகையான வறியபாடசாலைப் பிள்ளைகள் படிப்பதற்கென சிறந்தஓர் பாடசாலைமண்டபத்தை அமைத்துக் கொடுத்தார். அதனைப் பிரதமர்திறந்து வைத்தபொழுது, இலங்கையிலுள்ள அதிகஞ்சிறந்த பாடசாலைமண்டபங்களில் அதுவும்ஒன்றெனப் பாராட்டிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையும் தாய்மரியும்

( சங். சகோதரர் ஞானோதயம் வணிகசூரியர் )

(சென்றவாரத் தொடர்ச்சி)

இனி, உலகநாடுகளில் பெண்ணின் நிலைகேவலமானவிதத்தில்தாழ்த்தப்பட்டிருக்க, ஒரேயொருநாடு, ஒரேயொரு குலம், அதுதான் இஸ்ரூயேல் சமூகம், யூத குலம் மட்டுமே ஒழுங்கின வாழ்வின்கறைபடாது எங்ஙனம்காப்பாற்றப்பட்டது என்றகேள்வி எழுகிறது. யூதர்களின் உள்ளங்களிலே தீர்க்கதரிசனத்தின்ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. தெய்வவாக்குமீது கொண்டநம்பிக்கை அவர்களை நிலைகொள்ளச் செய்தது. ஆண்டவரின் அடையாளம் அவர்களது குடும்ப, சமூகவாழ்வை அழகுபடுத்தி வழிகாட்டிச்சென்றது. வேறுஎந்நாடும் அளியாத ஓர்நிலையைப் பெண்ணுக்குஅளித்தது. மெசியாவைத் தாங்கவேண்டிய தாயை — ஜெருசலேமின் மகிமையும், இஸ்ரூயேலின் மகிழ்ச்சியுமான அப்பெண்ணை முன்னிட்டு, அக்குலத்தில் அன்பும், ஆதரவும், மரியாதையும்கொண்ட சூழ்நிலையில் பெண் இருந்தாள். ஓர்தாயின் அல்ல, அந்தத்தாயின் காணமுடியாக் கவர்ச்சியே இஸ்ரூயேலைப் பிறநாடுகளின் அநாகரீகத்தினின்று மேலெழுப்பியது. இறைவனின் மானிடஅவதார காலத்திலிருந்து எல்லாப்பெண்களுக்கும், ஏன், எல்லாமனிதர்களுக்குமே அவள் தாயானாள். பெண்களை அடிமைகொள்ளும் ஆசைவெறிகொண்ட ஆண்கள்வாழ்விலும், ஆண்களால்வெறுக்கப்பட்ட பெண்களின் உள்ளங்களிலும் அரசுபுரிந்தாள் அத்தாய். மரியாயின் காணமுடியாத அந்தஆதரவு, தாயின் ஆதரவும், அரவணைப்புமாகவே இருந்தது.

## மரியாயி அன்னை ஆனாள்

அமைதியான மாலைவேளை, கலிலேயாவிலுள்ள ஒருசிறு கிராமமான நசரேத்தில் ஆரவாரம்அடங்கி வெளியிற்சென்றவர்கள் வீடுதிரும்பி இளைப்பாற்றியாக இரவின்அமைதியில் இனிய உறக்கம்காணப் படுக்கைக்குச்சென்றுவிட்டார்கள். தீபங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அணைந்தன. இயற்கையின் ஆணைக்கேற்பப் பறவைகளும் கூடுகளை அடைந்துவிட்டன. ஒளிமங்க, இருள் கௌவியது உலகை. அரவமேஇல்லை. இறைவனின் பக்தர்களும் ஆழ்ந்தநித்திரையில் தங்கள்கவலையை மறந்து இருந்தனர். எங்கும்அமைதி. சுருங்கச்சொன்னால் கிராமமேஉறங்கியது.

ஆனால், ஒருகுடிசைமட்டும் வாழ்வின் அடையாளத்தைக் காட்டிக்கொண்டு இருந்தது. ஓர்விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருக்க, ஆனால், ஓர் ஆன்மாவின் அன்பு கொழுந்துவிட்டு எரிந்தது. ஓர் அழகுவாய்ந்த கன்னிகை முழங்காலிலிருந்து அன்பின்மன்றாட்டை அமைதியுடன் செய்துகொண்டிருந்தாள். அவள் உள்ளத்திலோ, அல்லது சுற்றுப்புறத்திலோ சலனமென்பதே இல்லை. பாவசநிலையில் ஆழ்ந்திருந்தாள். திடீரென அந்த அறையில் ஓர்சலனம். மெல்லியகுரல். திடுக்கிட்டாள் கன்னிகை. அமைதியானவேளையிலும் சிறுஒலிகளைக்கேட்டுப் பழகியவள்தான். ஆனால், இப்பொழுது எழுந்தஒலி மண்ணுலகைச் சேர்ந்ததல்ல. திடுக்கிட்டாலும் சிறிது நேரத்தில் மனத்தெளிவுகொண்டாள். ஒலிவந்த திக்கைநோக்கி அசையாதிருந்தாள். படிப்படியாக அவள் இருந்தஅறையை வானுலகஒளி நிரப்பியது. அதோ! ஓர்வானதூதர் வாழ்த்துகிறார். ஆச்சரியமானகாட்சி! அதிலும் மிகஆச்சரியமானது அவருடைய வாழ்த்து! "அருள்நிறைந்தவளே வாழ்க" தாழ்மையின் மேன்மையால் அவள்உடல் நடுங்குகிறது. வானதூதர் விளக்கந்தந்து கடவுளின் எண்ணத்தை வெளிப்படுத்தி அவளதுபதிலுக்குக் காத்திருக்கிறார். எதிர்பார்த்தவாக்கு பலிதமாக அவள்பதிலினிடையே ஊசலாடிக்கொண்டிருக்கிறது. மனுக்குல மீட்பு அப்பெண்ணின்பதிலை எதிர்நோக்கி இருக்கிறது. அதோ! ஏதோவொரு கேள்வி, ஆம், அக்கன்னிகை வானதூதர் கூற்றுக்குப் பொருள்கேட்கிறாள். இயற்கைமுறைக்கு முரணாகக் கன்னிமையும், தாய்மையும் ஒன்றுசேருவதா? கணவனின்முகத்தை அறியாதவள் — கன்னிமையைக் கடவுளுக்கு அர்ப்பணித்தவள் கேட்கும் நியாயமானகேள்வி. வானதூதர் விளக்கந்தருகிறார். ஓர் புதுமை. மர்மங்களிலெல்லாம் பெரிய மர்மம். இஸ்பிரீத்துசாந்துவின் வரத்தால் அவள்தாயாராகிறாள். ஆனால், அதேநேரத்தில் அவள்கன்னிமைக்கும் அழிவு இல்லை. தெரிந்தெடுக்கப்பட்ட தேவி, கடவுளின்நேசி, கன்னிகைகளுள் மாபெருங்கன்னிகை தலைவணங்குகிறாள். எல்லாப்பொருட்களிலும், எல்லாவேளைகளிலும், எல்லாவிடங்களிலும் உரிய தன்வழக்கப்படி இறைவனின் இணையற்றவிருப்பத்தை ஒப்புக்கொள்கிறாள். முழுமனதுடன் தன்சம்மதத்தைத் தெரிவிக்கிறாள்.

கடவுளின் வாக்குறுதி பலித்துவிட்டது. மனுக்குலமீட்பு ஆரம்பமாகிவிட்டது. தனது முன்னையபெருமைக்கு உயர்த்தப்பட்டுவிட்டாள் பெண். கடவுள் மனிதனாக ஓர் தாயைக்கண்டார். மனிதன் கடவுளாக ஓர்மாதாவைக் கண்டான். கடவுளும் மனிதனும் தலையும்அங்கமுமாக ஓர்தெய்வீக உடலைப்பெற ஓர்அன்னையைப் பெற்றனர். என்றுமேகேட்டிராத தாய்மையை மரியாயிபெற்றாள். ஆகவே, என்றுமே எண்ணமுடியாத விளைவையும் உண்டுபண்ணினாள். இம்மகத்தான பதவியால் அவள்ஆற்றிய அரும்பணிகள்எத்தனை?

மனிதஅறிவுகொண்டு அளக்கமுடியாத ஓர்பிணைப்பை யேசுவுக்கும் மரியாயிக்குமிடையே அத்தெய்வீகத்தாய்மை நிலைநாட்டியது. இயற்கைநியதிப்படி தாயும்சேயும் இருபிரிக்கமுடியாத பிராணிகள். அப்படியானால் பரமதிரித்துவத்தின் விருப்பப்படி சாதாரணஒன்றிப்பை அதிஉன்னதவிதத்தில்தோற்றுவிக்கஏற்பட்ட இந்தத்தாயும், அந்தச்சேயும் எத்துணைமேலான விதத்தில் ஒன்றித்திருக்கவேண்டும்! இதில் முடிவில்லாஞானத்தின் பெருமையையும், இறைவனின் நற்குணத்தையும்காணலாம். மேலும், சொல்லொண்ணாத் துயராலும், தியாகத்தாலும் உண்டாகியவிலையால் பாவிகள்பெற்றமீட்பும் இதில்காணப்படுகிறது.

தமதிரித்துவத்தின் இரண்டாம்ஆள் இப்பூமியில் இறங்கிய காலத்திலிருந்து அவருக்கும், அவருடையதிருத்தாயாருக்குமிடையே எத்துணை ஆச்சரியமான சரீரஒன்றிப்பு! அவள் உதரத்தில் ஒன்பதுமாதங்கள் தங்கியிருந்தார். அவள்அருகில் முப்பதாண்டுகள்இருந்தார். எந்தமனிதனின் துணையும்இல்லாது தமது திருமேனியை அவளிடமிருந்துபெற்றார். ஆகவே, முழுதும் அவளுடையதே. உலகின்ஒளியாக நமக்குத்தந்த அவரதுஉடலும், மனுக்குலத்தை மீட்ட இரத்தத்தின் ஒவ்வொருதுளியும் அவளிடமிருந்துபெற்றவைகளே. அவளுக்குத் தாம்கொடுத்ததை அவளிடமிருந்தே தமக்குப்பெற்றார்.

மேலும் இறைவனுடைய தாயின் இப்பிள்ளைப்பேறு இயற்கைக்குமேம்பட்ட வரங்களை நமக்கு அள்ளிவீச ஏதுவாய்இருக்கிறது. இறைவன் தமது மகிமையைப் பெருக்க எடுத்துக்கொண்ட அலுவலுக்கு அவளை அருகதையாக்கினார். ஆகவே, எல்லாப்புண்ணியங்களிலும் மேலான நிலையில் இருந்தாள்எனவும், படைக்கப்பட்ட பொருட்கள் அத்தனையும் அனுபவிப்பதைவிட அதிகமாய் இறைவனின்முழுவல்லமையில் பங்குபெறுகிறாள் என்றும் நாம்ஊகிப்பது நியாயமே.

(தொடரும்)

# பாலும் தெளி தேனும்

(வைத்தியபூபதி)

உருசியில், குணத்தில் மட்டுமா மனிதன் இனிமையை விரும்புகிறான்? பேச்சில், நினைவிற்கூட இனிமைசுரக்க விழைகிறான். இனிமையின் முகடே தேன். தேன்கலந்த வாசகம்எனப் பேசப்படுகின்றது. மணிவாசகர் வாக்கு, திரைப்பட இரசிகர்கள், அறிஞர்களின் வாய்வண்ணங்களைப் புகழுகையில், "தேன்துளிகள்" என்று எழுதுகின்றனர். காதலி தேன்மொழியாளெனச் சிறப்பிக்கப்படுகின்றாள்.

"பாலும் தெளிதேனும்" என்பது நம்முன்னோர்கள் கையாண்ட அரும்பெரும சுகவழியின் சிகரம். தேன் விலைமதிக்கமுடியாத உணவுப்பொருள். "அனுபானத்தின் அரசன்" எனப் போற்றப்படும் தேனை ஒருசிறந்த ஆகாரமெனக் கொண்டாடாத தேசம் இல்லை. தேன் ஒருபோதும்கெடாத பொருள். தற்போது பிரித்தானிய நூதனப்பொருட்காட்சிச்சாலையில் பழைய காலத்துப் பாபிலோன்நாட்டுத் தேன் உண்டு.

பண்டைக்காலத்தில் தேனிற்கு விசேஷமதிப்பு இருந்தது. மக்கள் கரும்புச்சீனி செய்யப் படித்ததெல்லாம் சமீபத்தில்தான். அதற்குமுன்னெல்லாம் தேனுக்குத்தான் மிகுந்த கிராக்கிஇருந்தது. தேனின் அருமை பெருமைகளையும், குணங்களையும் மறந்துவிட்டோம். அதன் பலன் கைமேலே கிடைத்திருக்கிறது. பிள்ளைகளின் பற்களைப்பாருங்கள். அவைகள் சொத்தைவிழுந்து போயிருக்கக் காரணம், நாம் தேன்அருந்துவதற்குப் பதிலாக வெள்ளைவெளேரென்று சுத்தி செய்யப்பட்ட சீனியைப் பாவிப்பதுதான்.

தேனிலுள்ள சீனி ஏற்கனவே சீரணிக்கப்பட்ட சீனிஎன்றும், அதுசீக்கிரத்தில் பலத்தைக் கொடுக்கக்கூடியதென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாகத்தேனில் 18பங்கு சலமும், 78 பங்கு கரிநீரகைகளும் (Carbo-hydrates) 0·2பங்கு தாதுப்பொருட்களும், 4 பங்கு இன்னின்ன அளவினதென்று சரியாக நிர்ணயிக்கமுடியாத பலபொருட்களும் இருக்கின்றன. பூவிலுள்ள மகரந்தம், பிசின், வச்சிரம் (Glue) எளிதிலே ஆவியாகக்கூடிய எண்ணெய்கள் முதலியன அவற்றில் இருக்கின்றன.

மகரந்தம்என்பது ஒருநேர்த்தியான பொடி. அதில் பிசிதம் நிரம்பஉண்டு. அதுசிறுவர்களுக்கும், வளரும்பிள்ளைகளுக்கும் தலைசிறந்த ஆகாரமாகும்.

தேன் இருதய வளர்ச்சிக்கு மேலானது. இதைஅருந்துவதால் மனம் தேறுவதுடன், இருதயமும் துப்புரவாகி வலிமையுமுண்டாகிறது. தூக்கம்இல்லாமல் துன்பப்படுவோர் தேனை அரைஅவுன்சு உட்கொண்டால் போதும் இன்பமாக நித்திரை செய்வார்கள். வைத்திய ஆராய்ச்சியின் முடிவாகப் பலவியாதிகளுக்குத் தேன் கைகண்ட மருந்தாகப் பயன்படுகிறது. காமாலை, சீதபேதிநோய்களையும், சலப்பை, இருதயம் முதலிய முக்கியஉறுப்புகளின் நோய்களையும் கண்டிக்கத் தேன் ஒருநல்ல மருந்தாகும்.

உணவுசெரித்தலுக்குத் தேன்நல்லதோர்மருந்து. புலால்உண்பதைவிடத் தேனைக்குடித்தால் அதிகஉற்சாகமும், ஆற்றலும்உண்டாகிறது. ஒரு அவுன்ஸ் தேனின் கனலி (Caloric) மதிப்பு இரண்டு முட்டைகளுக்கும், $2\frac{1}{2}$ றாத்தல் மஞ்சள்முள்ளங்கிக்கும் (Carrots) சரிக்குச்சரியாகும்என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

விவாகமான தம்பதிகள் இரவில் பால்அருந்தும்போது ஒருதேக்கரண்டி தேன் சாப்பிட்டுவந்தால் வீரமும், ஆற்றலும், மகிழ்ச்சியும் அதிகப்படுகின்றன. தம்பதிகளில் யாருக்குப் பலக்குறைவோ அவர்மாத்திரம் ஒவ்வொரு இரவும் பாலுடன் தேனைக் கலந்துபருகலாம். எல்லோரும ஒரு கோப்பை சூடானபாலில் ஒருதேக்கரண்டி தேன் விட்டுக்கலக்கிப்பருகும் வழக்கத்தைக் கைக்கொள்வது மிகவும் நல்லது.

பித்தம் அதிகப்பட்டுத் தலைசுற்றல், வாந்தியெடுத்தல் முதலியவற்றால் அல்லற்படுவோர் இஞ்சியை நன்றாகக் கழுவிச் சுத்தம்செய்து, துண்டு துண்டாக நறுக்கித்தேனிலே இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஊறவைத்து அதிகாலையில் இரண்டுமூன்று துண்டுகள் சாப்பிட்டுவர எப்பேர்ப்பட்ட பித்தமும் சமனமாகும். பித்தகாரணமாக வாந்தி வருமானால் இஞ்சிச்சாற்றை உள்ளங்கையிலே காலணாவட்டம்எடுத்து உச்சந்தலையில்வைத்து நன்றாகத் தேய்க்கவேண்டும். அதன்பின்னர் ஒருதேக்கரண்டி அளவு தேன்பருகவேண்டும். ஒரேமணிநேரத்தில் இதன் குணம்தெரியும்.

பொறுக்கமுடியாத வயிற்றுவலியா? கவலைவேண்டாம். ஒருதம்ளர் கொதிக்கும் வெந்நீரில் ஒரு தேக்கரண்டி தேன்விட்டு நன்றாகக்கலக்கிக் குடித்துப் பாருங்கள். பதினைந்து நிமிஷங்களில் வயிற்றுவலி நின்றுவிடும். குழந்தைகளுக்குத் தினந்தோறும் அரைக்கரண்டி தேன்கொடுத்து வாருங்கள். குழந்தைகளின் தசைகள் உறுதியாகும். இரத்தமும் சுத்தியாகி வன்மையுடன் விளங்குவார்கள். அழகு உண்டாகும்.

சுத்தமான தேன் பளிங்குபோன்று முகம்பார்க்கக்கூடிய தெளிவாகவும், சற்றுநேரம் வைக்கப்படுமாயின் வெள்ளைச் சீனியைப்போல் உறையக்கூடியதாகவும் இருக்கும். அது தனிப்பட்ட மணமும், சுவையும் கொண்டது. சுத்த வெள்ளையாகவோ கறுப்பாகவோ இருப்பது நல்லதேன் என்று தெரிந்துகொள்ளலாம். தேனின் மணமும், நிறமும் எந்தப்பூக்களிலிருந்து தேனீக்கள் மதுசேகரிக்கின்றனவோ அப்பூக்களைச் சார்ந்தே இருக்கும். வேப்பம் பூக்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தேன் சற்றுக் கசந்திருக்கும். மஞ்சள்நிறத்தேன் பலவகைக்காடுகளிலே சேமித்து வைக்கப்பட்ட தேனாகும். வசந்தகாலத்தில் எடுக்கப்படும் தேன் எல்லாவற்றிலும்பார்க்க நல்லது. வேனிற்காலத்தில் சேகரிக்கப்படும் தேன் இலையுதிர்காலத்தில் எடுக்கப்படும் தேனைப்பார்க்கிலும் விசேஷமானது.

மேல்நாடுகளிலே புண்களை ஆற்றவும், கிருமிகளைக் கொல்லவும் தேனை விசேடமாகப் பயன்படுத்துகிறார்கள். மஸ்கோ மருத்துவசாலையிலே வயிற்றில் அல்லது குடலில்உள்ளபுண்களைத் தேனின்உதவியாலே சிகிச்சை செய்தார்கள். பலவருடங்களாக வயிற்றுப் புண்ணாலும், குடற் புண்ணினாலும் அவதிப்பட்டுவந்த நோயாளிகள் 10 நாட்களுக்குப் 10றாத்தல்தேனை அருந்தியதில் புண்கள்ஆறித் துன்பம் நீங்கியது. வயிற்றுப்புண், குடற்புண்களுக்குத் தேனைவிட அருமையான மருந்து வேறுகிடையாது இவ்வளவு விசேட குணங்களைத்தரும் தேனை இனியாவது அனைவரும் அருந்திப் பயன்பெறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்



### "கருதினலை விடுதலைசெய்யுங்கள்"

"போலாந்தின் திருச்சபை அதிகாரியான கருதினல் விசின்ஸ்கி ஆண்டவரை விடுதலைசெய்துவிடுமாறு போலாந்த கம்யூனிஸ்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வீரா" என்று பிரித்தானிய பாராளுமன்றத்திலே லிவர்ப்பூல்நகரின் ஸ்கொத்லாந்த தொகுதிப் பிரதிநிதியான திரு. டேவிட் லோகன் அவர்கள் வெளிநாட்டு மந்திரியாரைக் கேட்கவிருக்கின்றார். கருதினல் ஆண்டவர் சிறைவைக்கப்பெற்று இப்போது ஒருவருடத்துக்கு மேல் ஆகிவிட்டதுஎன்பதையும இவர் சுட்டிக்காட்டி, "அவர் இருக்குமிடத்தை அறிந்து கொள்ளமுடியாது கத்தோலிக்க மக்கள் எத்துணை மனக்கலக்கம் அடைந்துள்ளார்கள்" என்பதையும் இவர் வெளிநாட்டுமந்திரியாருக்கு எடுத்துக்கூறவிருக்கின்றார்.

### லூர்துபதியில் குணமடைந்தவள்

வடஇத்தாலியிலே வறெலி எனும் பட்டினத்தைச்சேர்ந்த 22 வயதுடையவளான அன்ன லொன்கின் எனும்பெண் குடல் சம்பந்தமான க்ஷயரோகங் கண்டு நோய்முற்றிய ஆற்றுத நிலைமையிலே மாதாவின் சலுகையைத்தேடி லூர்துதிருப்பதிசென்றாள். நோயின்நிலைமையைஅவதானித்த டக்றர்மார் அவள் அங்குசெல்லாது தடுத்திருந்தார்கள். ஆனல், அவள் அதனைப் பறுவாய்பண்ணது லூர்துபதிக்குச் செய்த பிரயாணத்தின போது அவளின் நிலைமை அதிகம்மோசமாகிவிட்டதால் அந்தியதேவதிரவியானுமானங்கள் அருளப்பெற்றாள். பின்னர் ஒருவாறு அங்கு போய்ச்சேர்ந்து திருக்கெபியண்டை கொண்டுபோகப்பட்டபோது ஓர்விதமயக்கமுண்டாய் அன்றிரவுதானே சுகங்காணத் தொடங்கிப் பின்னர் குணமடைந்தாள்.

### பாப்பரசரும் பாகிஸ்தானும்

கிழக்கு - மேற்குப் பாகிஸ்தானிலே சமீபத்தில்ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கஷ்டநிவாரணத்திற்கெனப் பரிசுத்தபாப்பரசர் பாகிஸ்தானுக்கு 20,000 டலர் அனுப்பி வைத்திருக்கின்றார். இதிலே 10,000 டலர் பெறுமதியான செக்ஒன்று பாகிஸ்தானிலே வத்திக்கான்கருமாதிகாரியாய் இருந்துவருகிறவரான வான் மில்ரென்பேர்க் அதிமேற்றிராணியாரால் சென்ற ஐப்பசிமாதம் 20-ந் திகதியன்று உள்நாட்டுமந்திரியாரிடம் கையளிக்கப் படலாயிற்று. அவ்வேளை அதிமேற்றிராணியார் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அடைந்துள்ள கஷ்டங்களையிட்டும், நாட்டுக்குஏற்பட்ட பெருநஷ்டங்களையிட்டும் பாப்பரசரின் மனப்பூர்வமான அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார். மீதியான 10,000 டலரும் பாகிஸ்தானிலே வெள்ளத்தால் அழிந்துபோன கோவில்கள், சிற்றாலயங்களைத் திரும்பக்கட்டுவதற்கு உபயோகிக்கப்படும்.

### கத்தோலிக்க குரவரின் நியமனம்

பம்பாயிலுள்ள அர்ச். சவேரியார்கல்லூரித் தலைவராகிய யேசு சபையைச்சேர்ந்த அதிவண. சாந்தொப்போ சுவாமியவர்கள் இந்தியஅரசாங்கத்தின் தலைமைத் தாவரஅதிகாரியாகவும், (Chief Botanist) இந்திய தாவரஆராய்ச்சிப் பகுதியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இது மிகவும் பொறுப்பு வாய்ந்த ஓர்பதவியாகும். இந்தியாவிலுள்ள தாவரவர்க்கத்தைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ச்சிசெய்யும் வேலையானது தக்கநிபுணர் கிடைக்காமையால், பலவருடங்களாகப் பின்போடப்பட்டுவந்துள்ளது. சுவாமியவர்கள் இப்பணியைஏற்று நடத்த முற்றிலும் தகுதியுடையவர். இவர் தாவரவர்க்கங்களைப் பற்றி நீண்டகால ஆராய்ச்சி செய்து முதிர்ந்தஅறிவுபெற்றவர். இந்தியாவின் பொருளாதார நிலையை உயர்த்துமாறு பயன்படத்தக்க தாவரங்களையும், மருந்துகளுக்கு உபயோகப் படத்தக்கதாவரங்களையும்பற்றி ஒருவிபரமான அறிக்கை தயாரிப்பதே இவரதுமுக்கியகடமை. இராஜஸ்தானிலும், மற்றும் சிலபகுதிகளிலும் பாலைவனம் பரவிக்கொண்டே போவதைத் தடுப்பதற்கு ஒருவழிகாண்பதும் இவரது பொறுப்பாகும்.

### கருதினல் ஸ்ரீபினக் ஆண்டவர்

யூகோசிலேவிய திருச்சபை அதிகாரியான கருதினல் ஸ்ரீபினக் ஆண்டவருடன் இளமையிலே றோமாபுரியில் கல்வி பயின்றவரும், பிந்த அவருடைய அந்தரங்ககாரியதரிசியாய் இருந்தவருமான வண. பிறங்கோ செவர் சுவாமியார் சாகிறெப்நகரின் துணைமேற்றிராணியாராக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். கிருஸிக்ஃனும் தமது சொந்தக்கிராமத்திலே காவலில்வைக்கப்பட்டிருக்கும் சாகிறெப்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்ரீபினக்ஆண்டவர் விடுதலையாகிறவரையில் அவரதுமேற்றிராசனத்தின் தலைவராக இவரே இருந்துவருவார். அத்துடன் யூகோசிலேவிய திருச்சபைஅதிகாரியாகவும் கடமை பார்த்துவருவார். 48 வயதுடையவரான வண. செவர் சுவாமியார் யுத்தத்தின்பின் சாகிறெப்நகர குருமடத்தின் தலைவராக இருந்தார். பின்னர் கம்யூனிஸ்தர்களுடன் பிணக்குண்டானமையால் அந்நகரிலுள்ள கிறீஸ்து இராசா பங்கைப் பொறுப்பேற்றார்.

### சிறைவாசஞ்செய்யும் கருதினல்மார்

போலாந்தின் திருச்சபைஅதிகாரியான கருதினல் விசின்ஸ்கி ஆண்டவர் ஹெயில்ஸ்பேர்க் நகர சிறைச்சாலை ஒன்றில் இருந்துவருகிறாரென வார்சோ நகரிலே பாதுகாப்புமந்திரி காரியாலயத்தில் முன்னர் ஓர்உயர்தர அதிகாரியாயிருந்த திரு. யோசெவ் சுவியற்லோஅவர்கள் கூறுகின்றார். தற்போதுஇவர் வாஷிங்ரன்நகரிலே தொடர்ச்சியான பத்திரிகைக்காரர் மகாநாடுகள் நடத்திவருகின்றார். கருதினல்ஆண்டவர் ஓர் சந்நியாசஆச்சிரமத்தில் வைக்கப்பட்டிருக்கிறாரெனக் கம்யூனிஸ்த அரசாங்கசெய்திகள் ஆரம்பத்தில் தெரிவித்தன. போலாந்திலே குருமார்இன்றுமே கைதுசெய்யப்பெற்று வருகின்றனரென்றும், சிறைச்சாலைகளெல்லாம் கைதிகளால் மிதமிஞ்சித் தேங்கியிருக்கின்றனவென்றும் வெளிவந்தஅறிக்கைகளைத் திரு. சுவியற்லோ உறுதிப்படுத்தியிருக்கின்றார். நிற்க, 1940-ம் ஆண்டின் மாசிமாதத்திலே சீவபரியந்த சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றுச் சிறைவாசஞ்செய்துவருகிறவரும், ஹங்கேரிய திருச்சபைஅதிகாரியுமான கருதினல் மின்ட்சென்ரிஆண்டவர் மாதம்ஒருமுறை தம்முடைய தாயாரைச்சந்திக்கத் தற்போதுஅனுமதிக்கப் பெற்றிருக்கிறாரென வீயன்னநகரில் செய்திகிடைத்திருக்கிறது. இவர் நொகிறுட்வெறோஸி எனும் மலைப்பட்டினத்துக்குச் சமீபமான ஓர்மனையிலே தற்சமயம் சிறைவைக்கப் பட்டிருக்கிறாரென ஆஸ்திரியகத்தோலிக்க அச்சுப்பிரசுரசேவை அறிவிக்கின்றது.

### புதிய கத்தோலிக்க ஆஸ்பத்திரி

திருவாங்கூரைச் சேர்ந்த துருத்திபுரம்என்ற மேற்குக்கரைக் கிராமத்திலே அற்றிப்பெற்றி அதிமேற்றிராணியாரின் யூபிலி ஞாபகார்த்தமாக வெராப்பள்ளி அதிமேற்றிராசனத்தால் கட்டப்பெற்ற புதிய கத்தோலிக்க ஆஸ்பத்திரி சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டு, அதன்சிற்றாலயத்தில் திவ்விய பூசையும் நிறைவேறியது. பிலடெல்பியாநகர் வைத்தியமிஷன் கன்னியாஸ்திரீமார் இதனைப் பொறுப்பேற்று நடத்திவருகின்றார்கள். ஓர்டக்றரும, மூன்றுநேர்ஸ்மாருமாக நான்கு கன்னியாஸ்திரீமார் தற்போது இதிலே நோயாளரைப் பராமரித்துவருகின்றனர். மற்றோர் கன்னியாஸ்திரீ ஆஸ்பத்திரிசம்பந்தமான பிறகருமங்களை மேற்பார்வைசெய்து வருகின்றார். கடற்தொழிலாளரும், தென்னந்தோட்டக்காரருமாகக் கடற்கரைநீளம் வசித்துவருகின்ற 3,200 மக்களுக்கு இந்தஆஸ்பத்திரி வைத்திய - சத்திரவைத்திய சேவைகள் செய்துவரும். முன்சொன்ன கன்னியாஸ்திரீமாரால் இந்தியாவில்நடத்தப்படும் ஆறாவதுஆஸ்பத்திரி இதுவாகும்.

### ருஷியாவும் சமயவளர்ச்சியும்

நாஸ்திகருஷியாவிலே சமயம் தலைமறைவாயிருந்த காலம் போய் இப்போதுஅது தலையெடுக்கத் தொடங்கிவிட்டது. அதனல் கிறெம்லின் — அதாவது சோவியற்அதிகாரபீடம் பெரிதும்கலக்கம் அடைந்திருக்கிறது. ருஷியாவில் அதிகமதிகமான யுவர்கள், யுவதிகள் கோவில்ஆராதனைகளில் கலந்துவருகிறார்களென ருஷியபத்திரிகைகள் கூச்சலிடுகின்றன. விருத்தாப்பியர்கள்மாத்திரமே முன்போலத் தொடர்ந்து சமயத்தை அனுசரித்து வருகிறார்களெனக் கிறெம்லின் அதிகாரிகள் கூறிப் பெருமையடிக்கும் வழக்கமுடையவர்களாய் இருந்தார்கள். ஆனல், இப்போது தேவாராதனைகளுக்குச் சமுகமளிக்கும் வாலிபர்கள், இளம்பெண்களின் தொகை அதிகரித்துவரக்கண்டு கலக்கமடைகின்றார்கள். இதற்கெல்லாம் பாடசாலைகளும், ஆசிரியர்களுமே காரணமென்று சோவியற்ருஷியா முழுவதிலுமுள்ளபத்திரிகைகள் முறையீடு செய்து ஓலமிடுகின்றன.

### கம்யூனிஸ்தரின் பிறவிக்கோலம்

இந்தோ-சீனவிலே கம்யூனிஸ்தர்களிடம் கையளிக்கப்பட்ட வியெற்மின் பகுதியில் அவர்கள் வழமையான தங்கள் வேதவிரோத கோரச்செயல்களைநடத்தத் தொடங்கிவிட்டார்கள். அங்கு திவ்வியபூசை காணச்செல்லுகிறவர்களுக்கும், வீடுகளிலே திருச்சிலுவையைக் கொண்டிருக்கிறவர்களுக்கும், கழுத்திலே திருச்சிலுவையைத் தரித்திருக்கிறவர்களுக்கும் கம்யூனிஸ்தர்கள் வரிகள் விதித்திருப்பதாய்ச் செய்திகிடைத்திருக்கிறது. வியெற்மினின் தலைவனை ஹோ-சி-மின் என்பவனது பெரியபடங்களையும் ஸ்தாபிக்க வேண்டுமென்று அநேககோவில்களுக்கு ஏற்கனவே கட்டளைபிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சிலஇடங்களிலே பிள்ளைகள் சிலுவைஅடையாளம்போடும்போது பரமதிரித்துவத்தின் திருநாமங்களுடன் இந்தக் கம்யூனிஸ்ததலைவனின் நாமத்தையும் ஞானேபதேசத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கற்பிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

---

● குடும்பசெபமாலைப் படையணியின் அப்போஸ்தலரான வண. பற்றிக் பெயிற்றன் சுவாமியார் தற்போது ஸ்பானியதேசத்திலே பில்பாவோ, ஈறகோன, சான்செபஸ்ரியன் மேற்றிராசனங்களில் அப்படையணியைத் தொடக்கியிருக்கின்றார். அங்குஇதனை முடித்துக்கொண்டுவருகிறமார்கழியிலே அவர் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு வாவிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபஅப்போஸ்தல சபை

**தன்மையும் நோக்கமும் :**

செப அப்போஸ்தல சபை என்பது விசுவாசிகளின் ஓர் பக்திக் கூட்டம். இதில் சேருகிறவர்கள் தங்கள் சொந்த இரட்சணியத்துக்காக உழைப்பதுடன் அப்போஸ்தொலிக்க சிந்தையுள்ளவர்களாய் யேசுக்கிறீஸ்துநாதாது ஞானச் சரீரத்தின் வளர்ச்சிக்காக—அதாவது கிறீஸ்துநாதரின் இராச்சியம் உலகிற் பரம்புவதற்காகத் தங்கள் செபத்தினாலும், பரித்தியாகங்களினாலும் உழைத்தும் வருகிறார்கள். தங்களைக் கிறீஸ்துநாதரின் உறுப்பினராக உணரும் இவர்கள், பிறர் ஆத்தும இரட்சணியத்திலும் கவனம் செலுத்த வேண்டுமென்பதை உணர்ந்து செய்யும் பிரதான கிரியைகள் பின்றுவருமாறு: மோட்சத்திலே மனிதருக்காகச் சதா மனுப்பேசிக் கொண்டும், திவ்விய பூசைப்பலியில் தம்மையே ஒப்புக்கொடுத்துக் கொண்டும் இருக்கின்ற கிறீஸ்துநாதரோடு இவர்கள் தங்கள் வாழ்க்கையை இணைக்கிறார்கள். சில மந்திரங்களை மாத்திரம் சொல்லுவதோடு நில்லாமல் கிறீஸ்துநாதரோடு தங்கள் முழுச்சீவியத்தையும் பரமபிதாவுக்குக் கையளித்து, யேசுவின் திருஇருதயத்தின் கருத்துகளுக்கு இசைந்தபடி செபம் செய்து ஒறுத்தல் முயற்சிகளையும் ஒப்புக் கொடுக்கிறார்கள். இஷ்டப்பிரசாதத்தினால் கிறீஸ்துநாதருடன் அடைந்து கொள்ளும் அதிசயமான ஒன்றிப்பை நமது கிரிகையிலும், செபத்திலும், துன்பங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரச் செபஅப்போஸ்தலத்துவம் எம்மைப் பயிற்றுகிறது.

* * *

### கார்த்திகை மாதம்

போதுக் கருத்து :— கிராமாந்திர மக்களிடையே விசுவாசம் காப்பாற்றப்பட்டுப் புதுப்பிக்கப்படுதலுக்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து :—** மத்தியஅமெரிக்காவிலும், மேற்குஇந்திய தீவுகளிலுமுள்ள வேதபோதக பிரதேசங்களுக்காக மன்றாடிக்கொள்வது.


சத்தியவேத
# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 4-ந் திகதி


## இரக்கமாயிரு!

*Communicated*

கிறீஸ்துவஆத்துமமே! உன்னைப்போலே இவ்வுலகில் ஒருகாலம் வாழ்ந்திருந்து இப்போது உத்தரிக்கிறஸ்தலத்தில கிடந்து வருந்தும் ஆத்துமாக்கள்மேல் இரக்கமாயிரு. ஏனெனில், அவர்கள் தங்கள் ஏககதியான சர்வேசுரனைப் பிரத்தியட்சமாய்த் தரிசிக்கக்கூடாததினாலே நாவுக்கெட்டாத உபத்திரவப் படுகிறார்கள். நரக அக்கினி போலும் அகோர அக்கினியில் வெந்து பதைபதைத்துத் துடிக்கிறார்கள். மனிதரை வாதிக்கக்கூடிய சகல வியாதிகளிலும், வேதசாட்சிகள் அனுபவித்த சகல நிஷ்டூர வேதனைகளிலும் பார்க்க, உத்தரிக்கிறஆத்துமங்கள்படும் ஒருநிமிஷநேரவேதனை அகாகடினமானது. அத்துணை நிஷ்டூரவேதனைப்படும் ஆத்துமங்கள்பேரில் பத்தியுள்ள ஆத்துமமே! நீ இரங்கமாட்டாயோ?

அந்த ஆத்துமங்கள் தங்களுக்கு அற்பஆறுதல்முதலாய்த் தாங்களாகவருவித்துக்கொள்ள முடியாது. ஏனெனில், அற்ப புண்ணியமாவதுசெய்ய அவர்களுக்குஇப்போதுதிராணியில்லை. அத்துணை அந்தரமான நிலையிலிருக்கும் ஆத்துமங்கள் மேல இரங்காவிடில் வேறுயார்பேரில் இரங்குவாய்? நீ இதைவைத்து வாசிக்கும் இந்நேரத்திலே உத்தரிப்புஸ்தலத்தின் அக்கினிச் சூளையிலேகிடந்து பதைபதைக்கிற ஆயிரக்கணக்கான ஆத்துமங்களை உன்விசுவாசககண்ணைத் திறந்து பார்க்கமாட்டாயோ? அந்த ஆத்துமங்களுள் உனககு இரத்தஉரித்துள்ளவர்களும், உன்பிரிய சிநேகிதர்களுமான பலர் இருக்கக்கூடுமே. அவர்கள்மேலாவது மனமிரங்க மாட்டாயா?

அக்கினிச் சிறைச்சாலையாகிய உத்தரிப்புஸ்தலத்தின் வேதனை நெடுங்காலத்துக்கு நீடித்து நிற்குமேயாகில் அதைச்சகிப்பதெப்படி? மெய்யாகவே அநேக ஆத்துமங்கள் உத்தரிப்புஸ்தலத்தில் எத்தனையோ வருடகாலம் கிடந்துவாதைப்படுகிறார்கள். சிலஆத்துமங்கள் நூறு வருடத்துக்கும், சிலஆத்துமங்கள் ஐஞ்ஞூறு வருடத்துக்கும், சிலஆத்துமங்கள் உலகமுடிவு மட்டுக்கும் உத்தரிப்புஸ்தல அக்கினியிற்கிடந்து வேகத் தீர்வையிடப்பட்டதாக ஆண்டவர் புண்ணியஆத்துமாக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அந்தப் பயங்கரமான ஸ்தலத்திலே ஒரு நிமிஷம்மாத்திரம் இருப்பதே ஆயிரம்யுகம் இருப்பதாகத் தோன்றுமே. ஒருவன் நெருப்பிற்கிடந்து வேகக்கண்டால் மனந்துடித்து அவனைமீட்டெடுக்கப்பார்ப்போமே. அப்படியிருக்க, அத்தனைவருடக்கணக்காய் அவ்வளவுபயங்கரமான அக்கினியிற் கிடந்துவேகிற ஆத்துமங்களபேரில் இரங்காதிருக்கலாமா?

தேவன் உத்தரிக்கிற ஆத்துமங்களின் உத்தரிப்புக்கடனை மன்னித்து அவர்களுக்கு நித்தியஇளைப்பாற்றியைத் தீவிரமாய்க் கொடுத்தருளச் சித்தமாகும்படி உன்னால்இயன்ற பத்தி முயற்சிகளைப் பத்தியாக அனுசரித்து ஒப்புக்கொடு.

உனது பத்திமுயற்சிகளால் உதவிபெற்ற ஆத்துமாக்கள் மோட்சவீட்டிற் பிரவேசித்த பிற்பாடு உன்மேல் நன்றிகூர்ந்து உனக்காகத் தப்பாமல் மன்றாடியேதீருவார்கள். உனது மூலமாக அவர்களுக்குவிளைந்த நன்மையிலும் அவர்கள்மூலமாக உனக்கு எத்தனையோமடங்கு ஏராளமானநன்மை விளையும். அவர்களுக்கு ஆறுதல் வருவிக்க அசட்டைசெய்வாயாகில், நீ உத்தரிப்புஸ்தலத்திற் கிடந்துவேக நேரும்போது, நீயும் ஆறுதல் வருவிப்பாரின்றி அவதிப்படும்படி ஆண்டவரும்உன்னை நீதிப்பிரகாரம் விட்டுவிடக் கூடுமென்று நிச்சயித்துக்கொள். "எந்த அளவைக்கொண்டு அளப்பீர்களோ, அதைக் கொண்டே உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்கா VI. 38) என்றும், "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்களே இரக்கமடைவார்கள்" (மத். V. 7) என்றும் திவ்வியஇரட்சகர் திருவாய்மலர்ந்திருக்கிறார். ஆகையால், நீ இம்மையிலாயினுஞ்சரி, மறுமையிலாயினுஞ்சரி தேவஇரக்கத்தை அடையவிரும்பினால் மகாஇரக்கத்துக்குப் பாத்திரமாயிருக்கிற உத்தரிப்புஸ்தல ஆத்துமங்கள் மேல்இரக்கமாயிரு. அந்த ஆத்துமங்களை மீட்டுக் கரையேற்ற ஆண்டவரிடம் பிரயாசைப்படு.

# கத்தோலிக்க உலகம் பரலோக இராக்கினியாக மரியாயை வாழ்த்துகிறது

வத்திக்கான் நகர் — திங்கட்கிழமை

### தந்திச்சமாச்சாரம்

"உலகிலுள்ள 40 கோடி கத்தோலிக்கமக்களுக்கும் ஓர்நவமான திருநாளை ஆரம்பித்து வைத்துப் பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசர் நடத்திய மகத்தான திருவைபவம் ஒன்றிலே இன்று தினம "பரலோக இராக்கினி" யாகப் பரிசுத்த கன்னிமரியப் மாளுக்குத் தத்ரூபமாகத் திருமுடிசூட்டலாயினர். "பரலோக இராக்கினியான பரிசுத்த கன்னிமரியம்மாளின் திருநாள் வருடந்தோறும் வைகாசிமாதம் 31-ந் திகதியில் கொண்டாடப்படும்.

78 வயதுடையவரான பாப்பரசர் இற்றைக்கு இருமாதங்களின்முன்னர் தமதுகுடர்சம்பந்தமான நோய் திரும்பவும் ஏற்பட்டபின் முதன் முதலாகத் தமது பிரதம திருச்சடங்கை நடத்தும்படியாக உலகில்மகாப் பிரமாண்டமான ஆலயமாகிய சம்பேதுருவானவர் மகாலயத்தைநோக்கி மூன்றுலட்சம் மக்களைக்கொண்டதாய் மிகநெருக்கமாகத் தேங்கியிருந்த மாபெருஞ் சனக்கூட்டத்தினூடாகத் தோள்உயரத்துக்கு மேலாகத் தூக்கிச்செல்லப்பெற்றார்.



பாப்பரசர் தமதுசிம்மாசனத்தில் வீற்றிருந்தபடியே இரு வெள்ளி ஒலிபெருக்கிகள்மூலம் பேசுகையில்:

உலகத்தைப் பீடித்திருக்கும் துன்பங்களைப் பரிகரிக்கவும், வேதனையிலிருந்து அதனை விடுவிக்கவும், ஆவலோடு அதுதேடுகின்ற இரட்சணியபாதையிலே அதனைவழிநடத்தவும் கூடியதான உண்மையை உலகத்துக்குப் பகிரங்கமாக எடுத்துக்காட்டுவதே இத்திருநாளின் நோக்கமெனக் கூறிநின்றார். பாப்பரசர் நடத்திய முழுத்திருச்சடங்கின் போதும் அவரதுசொந்த வைத்தியரான புரொபெசர் றிக்கார்தோ கலியாஸி லிஸி அவர்கள் அவரோடிருந்தார்."

### முன்னர் பத்திரிகைகளில் வெளிவந்த சமாச்சாரம்

ரோமாபுரியில் நடைபெற்றமரியாயின்மகாநாட்டின் முடிபுதினமன்றே இத்திருவைபவம் நடைபெறலாயிற்று. அங்கு இந்த மகத்தான வைபவத்திற்குரிய ஆயத்தங்கள் பலதினங்களாகச் செய்யப்பட்டுவரலாயின. அன்று "ரோமைநகர் மக்களின்பாதுகாவலர்" என்ற தேவமாதாவின் புராதனப் பெருமைவாய்ந்த அழகியசித்திரப் படத்திற்கே நவமான மணிமுடி ஒன்று புனைந்து



அரசியான மரியாயின் திருநாள் பிரகடனஞ் செய்யப்படலாயிற்று. இத்திருநாளைப் பிரகடனஞ்செய்ய வேண்டுமெனக் கேட்கும் மனுக்களை அடக்கிய பன்னிருபுத்தகங்கள் இதுவரை பரிசுத்த பிதாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த மனுக்களை 1,040 மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார் வரையில் ஆதரித்திருக்கின்றார்கள். இவர்களிலே 51 கருதினால் மாரும், 8 பத்திறியாக்குமாரும் அடங்குவார்கள். மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாருள் 57 பேர் ஐரோப்பாவையும், 85 பேர் ஆசியாவையும், 60 பேர் ஆபிரிக்காவையும், 148பேர் வட அமெரிக்காவையும், 169 பேர் மத்திய – தென் அமெரிக்காவையும், 7 பேர் ஆஸ்திரேலியாவையும் சேர்ந்தவர்கள்.

தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமானார் என்பது விசுவாசசத்தியமாகப் பாப்பரசராலே பிரகடனஞ்செய்யப்பெற்ற மூன்றாவது வருடநிறைவுவிழாவன்றே இப்புதிய திருநாள் பிரசித்தஞ்செய்யப்பட்டுள்ளது. திருமுடிசூட்டுதற்கென்று முன் சொன்ன மாதாவின் சித்திரப் படம் அர்ச். மேரிமேஜர் மகாலயத்திலிருந்து சம்பேதுருவானவர் மகாலயத்துக்குக் கொண்டு போகப்படலாயிற்று. இப்புதிய திருநாளை ஞாபகப்படுத்துமாறு ரோமர்கள் சர்வலோக இராக்கினியான மாதாவின் திருச்சுரூபம்ஒன்றை அமைக்கவிருக்கின்றார்கள்.

---

● 'பறக்குந்தட்டு' என்று செய்தி பரந்துள்ள போர்விமானத்துக்குப் போட்டியாகப் பிரித்தானிய அரசு "பறக்கும் மஞ்சம்" என்ற நாமத்துடன் புதியதோர் போர்விமானத்தைக் கண்டுபிடித்துக் கட்டியிருக்கிறது. இதற்குச் சிறகுகளோ அன்றேல்றொட்டர்களோ இல்லை. தற்போது இந்த விமானம் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அவருடைய கண்ணீர்

"பின்னும்அவர் சமீபமாய் வந்த போது, பட்டணத்தைப் பார்த்து, அதன்பேரில் கண்ணீர்விட்டுஅழுதார்" (லூக். 19:41).

யேசுநாதர் ஒலிவேத்மலைஉச்சியிலிருந்து ஜெருசலேம்நகரை உற்றுப்பார்த்தார். ஒருவிநாடியுள் அதன் முக்காலச்சரித்திரமும் சர்வ ஞானியான அவர் மனக்கண்முன் வந்துநின்றது. அது கி. மு. 2100-ம் ஆண்டு மெல்கிசெதேக் என்னும சிற்றரசரின் இராசதானியாகும். காலக்கிரமத்தில் சலேம் — அதாவது "அமைதி நிலவும் நகர்' என்று பொருள்தரும் 'ஜெருசலேம்' என்றபெயரால் உலகப்பிரசித்திபெற்றது. யாக்கோபின் பன்னிருகோத்திரங்களுக்கும் அரசராகவிளங்கிய தாவீதுமன்னர், "வாக்குத்தத்தத்தின் திருப்பெட்டகத்தை" அங்கு கொண்டு சென்றார். அவருடைய புதல்வனான சலமோன் ஆட்சியில் ஜெருசலேம் அதுவரையும் கண்டிராத கீர்த்தியும், பெருமையும் பெற்றது. அவர் அங்கு உன்னதமான தேவாலயமொன்று கட்டிமுடித்தார். விலையுயர்ந்த அபூர்வக் கற்களாலும், பலவகைப்பலகைகளாலும் அதைச் சோடித்தார். திருப்பெட்டகத்தை அதனுள் ஸ்தாபித்தார். அன்றுமுதல் இஸ்ரயேல்சனங்களின் திவ்வியநகரம் அது.

இஸ்ரயேல் சனங்கள் கடவுளால் பிரத்தியேகவிதமாக அழைக்கப்பட்டவர்கள். ஆயினும், ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, எப்பொழுதும் அவர்கள் வாழவில்லை. வழிதவறித் தப்பான மார்க்கங்களில் சென்றவர்களை உண்மையான பாதையில் நடத்திச்செல்லத் தமது தீர்க்கதரிசிகளைக் கடவுள் அனுப்பினர். ஆனால், அப்போதகர்களைக் கல்லாலெறிந்து கொலைசெய்த பட்டணம் ஜெருசலேம். கடைசியாக உலகஇரட்சகராக அவதாரம்செய்த சருவேசுரனுடைய ஏககுமாரன் யேசுக்கிறீஸ்துவையும் அங்கேயே பலியிடப்போகிறது. "ஜெருசலேமே, ஜெருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடம் அனுப்பப்பட்டவர்களைக் கல்லால்எறிந்து கொல்லுகிறாயே; கோழியானது தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளுக்குள்ளே அணைத்துக் கொள்ளுகிறதுபோல, எத்தனையோமுறை நானும் உன்மக்களை அணைத்துக்கொள்ள விரும்பினேன், உனக்கு மனமில்லாமல்போயிற்றே. ஆதலால் உங்கள்வீடு, உங்களுக்குப் பாழாய்விடப்படும்" (மத். 23:37).

கி. பி. 70-ம் ஆண்டில் றோமானிய போர்வீரர்கள் ஜெருசலேம்நகரைத் தாக்கினார்கள். 143 நாட்கள் போர் புரிந்தார்கள். ஆறுலட்சம்யூதர்கள் போரிலே மாண்டார்கள். உன்னத தேவாலயத்தையும், கோட்டைகொத்தளங்களையும், மாடமாளிகைகளையும் இடித்துநாசமாக்கினார்கள். சீர்பெற்ற மாநகரம் இருந்தஇடம்கூடத் தெரியாதபடி சீரழிந்து தூசியானது. இங்ஙனம், ஆண்டவரின் தீர்க்கதரிசனம் சரிவர நிறைவேறியது. கிறீஸ்துநாதர் சொன்னவைகளெல்லாம் அப்படியே நிறைவேறியதை நேரில்கண்டறிந்தும் யூதர்கள் அவரை விசுவசித்து மனந்திரும்பினார்களா? இல்லை. அதன் பலன்?

கடந்தஇருபது நூற்றாண்டுகளிலும் அவர்கள்ஒன்றுபடாமல் உலகமெங்கும் சுற்றித்திரிகிறார்கள். பலஸ்தீன நாட்டில் ஒருநாளும் அமைதிநிலவினதில்லை. இன்றும் அங்கே சண்டைசச்சரவுகளும், அரசியற் குழப்பங்களும் குடிகொண்டிருப்பதை நாம்அறிகிறோம். யேசுநாதருடைய கருணையைப் புறக்கணிப்பதின் பலன் இது.

"உனக்குக் கிடைத்த இந்நாளிலாவது உன்சமாதானத்துக்கு உரியவைகளை நீ அறிந்திருப்பாயாகில் நலமாமே. ஆனால், இப்பொழுது அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன" என்றுசொல்லி அன்று யேசுநாதர் ஜெருசலேமைப் பார்த்துக் கண்ணீர்விட்டு அழுதார். இன்றுஅவர் நீகுடியிருக்கும் நகரை அல்லது கிராமத்தைப்பார்த்துக் கண்ணீர்விடுகிறார். இஸ்பிரீத்துசாந்துவின் ஆலயமான உன் ஆத்துமாவை அவர்அணுகுகிறார். அதன்நிலைமையை அவர் வருத்தத்துடன் கவனிக்கிறார். அவர் அருளையும், அன்பையும் வாரிச்சொரிய அதன் வாசற்படியைத் தட்டுகிறார். "எவனாவது என்குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால் நான் உள்ளேபிரவேசித்து அவனோடு உணவு அருந்துவேன்" (காட்சி 3:20).

—ஜே. எம்.

## "மந்திர விளக்கு"

இந்தியப்பிரதமர் பண்டிதநேருஅவர்கள் செஞ்சீனாவுக்கு விஜயஞ்செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். ஆனால், அவரது இந்தவிஜயத்தின்பலனை இன்னுஞ்சிலகாலம் இருந்துபார்க்க வேண்டியதே. செஞ்சீனாஎன்பது கம்யூனிஸ்தசீனாவாகும். கம்யூனிஸ்த ருஷியாவின் இணைபிரியாத் தோழநாடாகும். கம்யூனிஸ்தநாடுகளின் பேச்செல்லாம் யுத்தம்வேண்டாம், சமாதானமே வேண்டுமென, பறையறைந்துகொண்டு கம்யூனிஸ்தநாடுகள் அல்லாதவற்றிலே உள்நாட்டுக்குழப்பங்களையும், பல்வேறுபரிநாசவேலைகளையும் கிளப்பிவிட்டு, அவற்றிலெல்லாம் கம்யூனிஸ்த ஆட்சியை உண்டுபண்ணுவதே. கோறியா, இந்தோ-சீனாவில் நிகழ்ந்த சம்பவங்கள் இதற்குப்போதிய சான்றாகும். இந்தவேளை சோவியற்ருஷியாவின் "மந்திர விளக்கு" ஒன்றைப்பற்றிச் "சர்வவியாபி" பின்வருமாறு எடுத்துக்கூறுகின்றது:

"உலகவல்லரசுகள் ஒன்றோடொன்று போட்டியிட்டு இந்தியாவைத் தத்தம் பக்கத்திற்குஇழுக்க முயன்றுவருகின்றன. இதுவரையிலும் இந்தியா எந்தப்பக்கத்திற்கும் சாயாமல் சுதந்தரநடுநிலைமையைக் காப்பாற்றமுயன்றுள்ளது.

"நடுநிலைமை எப்பொழுதுமே மிக நுட்பமான ஒருபண்பு. அதைப்பழுதறப் பாதுகாப்பது எளிதன்று. நீதிக்கும் அநீதிக்கும் நடுவில்நின்று, நான் எந்தப்பக்கத்தையும் சார்ந்தில்லை, நான் இருதரத்தாரினதும் நண்பன் தான் என்று கூறுவது மிகஆபத்தான ஓர் அரசியல் விளையாட்டு. ஏனெனில், இருபக்கங்களினின்றும் தாக்குதலும், வற்புறுத்தலும்வரும். நீதியின் வற்புறுத்தல் நேர்மையான வழிகளிலும் அநீதியின் வற்புறுத்தல் கபடசூது நிரம்பிய வழிகளிலுமேவரும். இவ்வுண்மையை இந்தியமக்கள் உணர்வதற்கு எத்தனையோசான்றுகள் உள்ளன.

"கடந்தசிலமாதங்களாக இந்தியாவிலிருந்து ருஷியாசென்று திரும்பும் தூதுக்குழுக்களுக்குக் கணக்கேயில்லை. ருஷியாவுக்குச்செலல விரும்புபவர்களுக்கெல்லாம இலவசப்பயண ஏற்பாடுகள் எளிதில்அளிக்கப்படுகின்றன. ருஷியா இவ்வளவுபணத்தை வாரிஇறைப்பதன் நோக்கமென்னவென்பது சிந்திக்கும்ஆற்றல்படைத்தவர்களுக்கு வெளிப்படையானது. அரபிக்கதையில்வரும் மந்திரவாதி அலாவுதீனை அரவணைத்து அன்புகாட்டி அவனுக்குப் பட்டுச் சொக்காய்களையும், விளையாட்டுப் பொம்மைகளையும், கற்கண்டுத்துண்டுகளையும் ஏராளமாக வழங்கினான். அலாவுதீனிடமிருந்த மந்திரவிளக்கைப் பறிப்பதற்குச்செய்த சூழ்ச்சிகளே அத்தனையும். இந்தியாவிடம ஆசியாவின் மந்திரவிளக்கு இருக்கிறதென்பதை ருஷியா கண்டுபிடித்துள்ளது. அதைப் பிடுங்குவதற்கு எத்தனை கலாசாரத் தூதுக்குழுக்களையும், எத்தனை சுத்தானந்தத்தோழர்களையும் வரவழைப்பதற்கு ருஷியமந்திரவாதி தயங்கமாட்டான். மந்திரவிளக்கைக் கைப்பற்றிய பின்பு வட்டியும்முதலுமாக வாங்கிவிடலாமென்று அவனுக்கு நல்லஉறுதியுண்டு. கற்கண்டின்மோப்பம் பிடித்துச்செல்லும் எறும்புகளுக்கு அதில் மறைத்துவைத்துள்ள மயக்குமருந்து எளிதில்புலப்படாது.

"மந்திரவாதி கற்கண்டோடு நின்றுவிடுவதில்லை. புதுப்புது வழிகளிலும் ஆசைகாட்டத் தொடங்கியுள்ளான். இந்தியாவில் எஃகுஉற்பத்தித் தொழிற்சாலைகள் இல்லாதது ஒருபெருங்குறையாம்; அதனால், அதற்குவேணடிய எல்லாஉதவிகளையும் அளிப்பதாக வாக்களித்துள்ளான். இந்தியா அவ்வுதவிகளைப் பெற்றுக்கொள்வதென்றும் முடிவுசெய்துள்ளது. ருஷியபணமுடைகளுடன் ஐந்தாம்படையும் இறக்குமதியாகும்என்பதில் ஐயமில்லை. நடுநிலைமையைவிரும்பும் இந்தியா தனது மந்திரவிளக்கை இழக்காமல் விழிப்பாயிருக்கமென்பதே உலகநாடுகளின் நம்பிக்கை."

---

● அகிலஇந்திய வானொலிஆராய்ச்சிப்பகுதியானது ஓர் மண்ணெண்ணெய் விளக்குக்கொண்டு வானொலிக்கருவிஒன்றை இயக்கக்கூடிய நவீன முறைஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்தமுறைப்படி வானொலிசெற்றை இயக்கி மாதம்ஒன்றுக்குத் தினமும் மூன்றுமணிநேரம் செய்திகேட்க ஏற்படுஞ்செலவு மூன்றுரூபாமாத்திரமேயென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

● இங்கிலாந்திலே லீட்ஸ்நகரில் அர்ச். பெயிதின்போரால் கடந்தஐம்பது வருடகாலமாக நிலைபெற்றிருந்த அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்த சபைக் கோவில் கத்தோலிக்கரால் வாங்கப்பட்டுத் தற்போது அர்ச். பத்தாம்பத்திநாதரின் கோவிலாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. கடந்தமூன்றுவருடங்களிலும் லீட்ஸ்நகர் மேற்றிராசனத்திலே கத்தோலிக்க கோவிலாக மற்றப்பட்ட மூன்றாவது புறொட்டஸ்தாந்தகோவில் இதுவாகும்.

● கருதினால் ஸ்ரீபினக் ஆண்டவருக்கு உண்டானநோயைக் கண்டறிந்து, சிகிச்சைஅளிப்பதில் உதவிசெய்யுமாறு 1953-ம் ஆண்டு யூகோசிலேவியாவுக்குப் பறந்துசென்ற சிக்காகோ நகர பிரபலவைத்தியரான டக்டர் ஜோண் றாஸிக்அவர்களைப் பரிசுத்த பாப்பரசர் அர்ச். கிறகோரியாரின் நைற்பட்டம்வழங்கிச் சன்மானித்திருக்கின்றார். கருதினால்ஆண்டவர் கிறஸிக் என்ற தமதுசொந்தக்கிராமத்தில் இன்னுமே காவலில்வைக்கப்பட்டிருக்கின்றார்.

**ST. PATRICK'S COLLEGE, JAFFNA**

ADMISSION TESTS
for
New Entrants will be held on Wednesday 24-11-54 at 9 a.m.

Applications (on forms available at the College office) must reach the Rector not later than 15-11-54.

S. N. ARULNESAN, O.M.I.,
Rector.

## சுதேச வர்த்தமானம்

### கள்ளக் குடியேற்றகாரர்

நெடுந்தீவுக்குச் சமீபமாகச் சென்ற புதன்கிழமை இந்திய கள்ளக்குடியேற்றகாரர 24பேர் கப்ரின் சி. இராமநாதன் என்பவரால் வள்ளத்துடன் கைது செய்யப்படலாயினர். ரேகு உதவித் தலைவரால் வள்ளக்காரனுக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்படலாயிற்று. அத்துடன் வள்ளமும் பறிமுதல்செய்யப்பட்டது. கள்ளக்குடியேற்றகாரர் ஊர்காவற்றுறைப் பொலிசரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஓர்பெண்ணும், பிள்ளையும்உட்பட ஓர்தோணியில்வந்த வேறு 35 கள்ளக் குடியேற்றகாரரும் சென்ற வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை ரேகுஅதிகாரிகளின் கோஷ்டி ஒன்றால் கைதுசெய்யப் படலாயினர், வள்ளமும் கைப்பற்றபபட்டது.

### சோல்பறிபிரபுவின் பதில்

மாத்தறையிலுள்ள ருகுலாக்கல்லூரிப் புதியகட்டம்ஒன்றைக் கவர்னர்-ஜெனறல் சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் சமீபத்திலே திறந்துவைத்தனர். அத்திறப்புவிழாவிலே திரு. ராஜா ஹிவ்வித்தாரண அவர்கள் பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தனர் கிறீஸ்தவர்கள் — விசேஷமாய்க் கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் புத்தர்களை மேற்கொண்டுவிடுவார்கள்என்பதுதான் இங்குள்ள புத்தசமயிகள் கொண்டுள்ள அச்சபயமென்று நான் முன்னாள் கவர்னர்-ஜெனறல் சோல்பறி பிரபுவுக்கு எடுத்துக்கூறினேன். அதற்கு அவர் அளித்தபதிலிலே: அவர்கள் எந்தவிதமான அச்சபயமுங் கொள்ளவேண்டியதில்லை; ஏனெனில், கடந்த 400 வருடங்களாக மிஷனரிமார் கிறீஸ்துசமய போதகஞ் செய்துவந்தும் இந்நாட்டு மக்களில் நூற்றுக்கு 5விகிதத்திலும் அதிகமானோரை அவர்கள் மனந்திருப்பிக்கொள்ள முடியாமற்போய்விட்டார்களெனக் கூறலாயினர்.

### புத்த-மிஷனரிய பாடசாலைகள்

வெலிகாமததிலுள்ள சித்தார்த்த புத்தபாடசாலையில் 38வருடகாலம் ஓர் ஆசிரியராயிருந்த திரு. கே. டபிள்யு. டார்ளிறிஸ் சில்வா அவர்கள் சமீபத்திலே இளைப்பாறலாயினர். அப்போது அப்பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் அவருக்கு ஓர்பிரியாவிடை நடத்தினார்கள். அதற்குத் தலைமை வகித்த வெலிகாமப் பட்டினசபைத் தலைவர் திரு. ஏ. பி. டலுவத்தைஅவர்கள் பேசியபோது: "ஓர்புத்த சமய பிள்ளை ஓர்புத்தசமயசூழலிலே கல்வி பயிற்றப்பட வேண்டுமென்ற மூலாதார விதியை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால், இந்தநாடு மிஷனரிய பாடசாலைகளுக்கு நன்றிக்கடன் உடையதென்பதையும் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்; ஊரூராகச் சென்று மிஷனரிய பாடசாலைகளைக் கண்டனஞ்செய்துகொண்டு திரிகின்ற நமதுபுத்ததலைவர்கள் அதற்குப்பதில் தங்கள்புத்தபாடசாலைகளின் தரத்தை விருத்திசெய்வதற்கும், அத்துடன் புத்த பாடசாலைகளிலே புத்தபிள்ளைகள் சகலரும் கல்விபயிலச்செய்யும் படியாக அதிகமான புத்தபாடசாலைகளை ஸ்தாபிப்பதற்குமான நடவடிக்கைகள் எடுப்பார்களாக" எனக் கூறிநின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## இல்லையே !

'ஜெயம்'

(1) வாடிப் போன பூக்கள் மீண்டும்
வனப்புப் பெறுவ தில்லையே
ஓடிப் போன நாட்கள் இங்கு
ஒன்றும் வருவ தில்லையே.

(2) செல்வம் இளமை உடலம் மூன்றும்
செல்லும், நிலைப்ப தில்லையே
கல்விக் கெல்லை உலகந் தன்னில்
கண்ட எவரும் இல்லையே.

(3) உண்மை ஞானிக் கெந்த நாளும்
உலக கவலை யில்லையே
எண்ணும் எழுத்துங் கற்றி டாது
எமக்கு இன்பம் இல்லையே.

(4) பூவும் மணமும் ஒன்றை யொன்று
பிரிந்தி ருப்ப தில்லையே
சாவை வென்று நின்ற யாரும்
சகத்தில் இல்லை இல்லையே.

## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

பல வழிகளால் நாம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு உதவி செய்யலாம என்பது உங்களுக்குத் தெரியுமா? அதைப் பற்றிய விபரமான விளக்கத்தை ஞானோபதேசக் காட்சிச்சாலையில் கண்டிருப்பீர்கள்.

திவ்விய பூசைப்பலி மிகவும் சிறந்ததும், முதன்மையுமான உதவி. அவர்களுடைய பாவக்கறை நீங்க — பாவத்துக்குப் பரிகாரமாகத் திவ்விய யேசு ஒப்புக் கொடுக்கிற பலியைவிடச் சிறந்தது எது? திருப்பலியை அநேகமாக ஒப்புக் கொடுங்கள்.

செபமாலையைத் தியானித்துச் செபிப்பதும் மற்றொரு உதவியாகும். இச்செபத்தினால் நாம் அடையும் பலன்களை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு உதவலாம். வேறுஉதவிகள் தபம், தருமம்.

நாம் எமது சீவியத்தில் அடையக் கூடிய ஞானப் பலன்களை எமக்கென்று வைத்துக் கொள்ளாமல், உத்தரிக்கிற ஆத்துமாக்களுக் கென்று ஒப்புக் கொடுப்பது வீரம் நிறைந்த பிறர்சிநேகம்.

இம்மாதத்தில் உங்களால் இயன்றளவு நமது உத்தரிக்கிற சகோதரருக்கு உதவி செய்ய வேண்டும். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணா

## எதெல்றெட் அரசர்

எதெல்றெட்அரசர் தமதுநாட்டை ஆண்டுவந்தபொழுது பகைவர்கள் தம்முடைய நாட்டைப் பிடிக்க ஆயத்தப் படுவதாக அறிந்தார். அவர்களை எதிர்த்துத் தமது சேனையை அணிவகுத்து யுத்தத்துக்கு நடத்திச் சென்றார். யுத்தம் தொடங்கவிருந்த தினமன்றுகாலை அவர் திவ்வியபூசைகண்டு, தேவநற்கருணை பெறவேண்டுமென் எண்ணிக் கோவில் சென்றார்.

திவ்வியபூசை நடக்கும்போது, ஓர் சேவகன் ஓடிவந்து: "அரசே! பகைவர்கள் இதோ! வந்துவிட்டார்கள்; யுத்தம தொடங்கப்போகிறது; ஒரு நிமிஷம் தானும் நீர் தாமதித்தால் பெருந் தோல்வி ஏற்படும்; விரைவாக வாரும்" என்றான்.

அப்போது அரசர்: "நான் திவ்விய நன்மை வாங்கிக் கடைசி ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டுதான் கோவிலை விட்டு வெளிகொள்வேன்" என்றார்.

பின்னர் தமது செபத்தைத் தொடர்ந்து செய்தார். தமது புலன்களைப் பூசைப் பலியிலும், நற்கருணை நாதரிலுமே முழுதுஞ் செலுத்திப் பயபக்தியாய் வேண்டிக்கொண்டிருந்தார். பூசை முடிந்த பின்னரே கோவிலைவிட்டுப் புறப்பட்டார்.

அதன்மேல் முன்னணியில் தலைமை தாங்கிநின்று தமதுசேனையை நடத்தினார். யுத்தம் மும்முரமாக நடந்தது. அவரது சேனை மிகச்சிறியதே. ஆயினும் அவரது சேனாவீரர் அரசரை மிகவும் நேசித்தார்கள். தேவன் அவர்களுக்கு உதவி அளித்தார். அவர்கள் நாடு எதிரிகளிடமிருந்து காப்பாற்றப்பட்டது. எதிரிகள் புறங்காட்டி ஓடினார்கள். அரசர் தேவனுக்குத் தோத்திரஞ் செய்து தமது சேனையைத் திரும்பவும் வழிநடத்திக் கொண்டு ஆனந்தமாகத் தமதுநாடு திரும்பினர்.

பூசைப்பலியும், நற்கருணை நாதரும், தேவனின் ஆசீர்வாதமும் அவருக்கும், அவரது வீரர்களுக்கும் எவ்வாறு துணை புரிந்தது என்று கண்டீர்களா?

— எம். ஜெயம்

## லூசியா அளித்த வாக்கு

லூசியா என்னும் சிறுமி தான் எப்போதும் கன்னிகையாய் இருப்பதாகத் தேவனுக்கு வாக்குக் கொடுத்தாள். அவள் கொடுத்த வாக்கை அவளுடைய தாய் அறியவில்லை. அதனால் சிறுமி வளர்ந்து பிராயமானபோது அவளை ஓர் அஞ்ஞான வாலிபனுக்கு விவாகஞ் செய்து வைக்க எண்ணினாள்.

இதை அறியவந்த லூசியா தேவனைப் பார்த்து அதி உருக்கமாக மன்றாடினாள். அவளுடைய தெய்வீக பத்தா அவள் மன்றாட்டைக் கேட்டருளினார். சிலநாட்களின்பின் தாய் வியாதியாய் விழுந்தாள். லூசியா அவளை அர்ச். அஞ்ஞேசம்மாளின் கல்லறைக்கு அழைத்துச்சென்று அந்த அர்ச்சியசிட்டவளின்உதவியை வேண்டினாள். அவள் வேண்டுதலால் தாய் பூரண சுகம்பெற்றெழுந்தாள்.

அதன்பிறகே லூசியா தான் இரகசியமாகத் தேவனுக்குக் கொடுத்த வாக்கைப்பற்றித் தாயிடம் அறிவித்தாள். மகளின் மன்றாட்டே தனக்குச் சுகம் அளித்தது என்று அவள் உணர்ந்தபடியால் இப்பொழுது மகளின் விருப்புக்கு மாறுநடக்க அவள் விரும்பவில்லை. "மகளே! நீ கொடுத்த வாக்குப்படி நடந்துகொள்" என்று சொன்னாள்.

ஆனால், அவளை விவாகஞ் செய்யக் காத்திருந்த அந்த அஞ்ஞான வாலிபனோ எதுவிதமும் அவளைத் தன்பக்கம் திருப்பிவிட முயன்றான். ஆனால், அவள் சம்மதிக்கவில்லை. இதைக் கண்டு அவன் கோபம் கொண்டவனாய் "அவள் ஓர் கிறீஸ்தவள்" என்று நகர அதிகாரிக்கு முறையிடு செய்தான். ஏனெனில், அக்காலத்திலே வேத விரோதிகள் கிறீஸ்தவர்களைப் பிடித்துக் கொலைசெய்து வந்தார்கள். அதிகாரி இதைக்கேட்டதே அவளைப் பிடித்துச் சிறையிலிட்டு மற்றவர்களைப் போலவே அவளையும் ஆக்கினைப் படுத்திக் கொலை செய்வித்தான். அவளும் வேதசாட்சியாய் மரித்துக் கன்னிமை முடியும், வேதசாட்சிமுடியும் ஒருங்கேபெறும் பாக்கியமடைந்தாள்.

— J. M. J.

## சரியான விடைகள்

1. சம்பிரமமாக நிறைவேறிய மரியாயின் சமாகமம். (இதனை விரும்பிய வாறு நிரப்பிக்கொள்ளலாம்)

| | | | |
|---|---|---|---|
| ம் | நி | பி | யா |
| க | றை | ச | யி |
| மா | ய | றி | ன் |
| ம | வே | ரி | ர |

2. 12 வயது.

3.

| | | | |
|---|---|---|---|
| 4 | 14 | 15 | 1 |
| 9 | 7 | 6 | 12 |
| 5 | 11 | 10 | 8 |
| 16 | 2 | 3 | 13 |

4. விளையாட்டுக் கடிகாரம்.

5. $12\frac{1}{2}$ மணி.

முழுவதற்கும் சரியானவிடை கொடுத்தவர்கள்:

எஸ். ஸ்ரனிஸ்லாஸ்,
அம்பிட்டியா, கண்டி.

தெரேசா சுவாம்பிள்ளை,
அலுக்லை, அளவெட்டி.

குணராணி அருளானந்தம்,
ஏழாலை.

ஞானரத்தினம் பத்திநாதர்,
[illegible], அளவெட்டி.

எஸ். எம். அமானுல்லா,
அரசடி பாடசாலை, மட்டக்களப்பு.

E. A. S., Jaffna.

* * *

ஒருபிழைமாத்திரம் விட்டவர்கள்:

ச. லில்லிமேரி தெரேசா,
தி. கு. க. மடம், தமிழ்பபாடசாலை,
யாழ்ப்பாணம்,

எவ், துரைராஜா,
றோ. க. பாடசாலை, புங்குடுதீவு.

பொ. ஜெனேசியஸ்,
சாவகச்சேரி.

க. சவிரிமுத்து,
றோ. க. பாடசாலை, புங்குடுதீவு.

கிறிஸ்ரின் சவிரிமுத்து,
தி. கு. க. மடம், தமிழ்ப்பாடசாலை,
யாழ்ப்பாணம்.

நான்காவது வினவிற்குப் பலர் பழுதான கடிகாரமென விடைகொடுத்திருந்தார்கள். அதைச் சரியான விடையாக ஏற்றுக்கொண்டோம். ஆனால், எஸ். ஸ்ரனிஸ்லாஸ், (அம்பிட்டியா, கண்டி) அவர்கள் அந்தவினவிற்கு விளையாட்டுக்கடிகாரம எனக் கொடுத்திருந்த விடையானது மிகவும் மெச்சத்தகுந்ததாகும்.

## சந்தேகம் தீர்ந்தது

யூத பெரியாரிற்சிலர் தங்களுக்குள்ள சந்தேகத்தைத் தீர்க்கப் போவார்போல் திவ்விய யேசுவிடம் போனார்கள் ஆனால், அவர்கள் மெய்மையாக அவர் பேச்சில் குற்றம்பிடிக்கவே போனார்கள்.

"சேசாருக்குத் திறைகொடுப்பது சரியோ, நீதியோ?" என்றதுதான் அவர்களுடைய கேள்வி. ஆனால், இது அவர்களின் கேள்விஅல்ல, அவர்கள் விரித்த கண்ணி.

கொடுக்கலாம் என்று மறுமொழி சொன்னால் யூதசாதியின் விரோதியாக அவர் தம்மைக் காட்டிக்கொள்வர். கொடுக்கக் கூடாதென்று கூறினால் இராச துரோகியாக மதிக்கப் படுவர். அதனால் இருதலைக் கொள்ளியெறும்பு போலாவார் என்று நினைத்தார்கள் அந்தயூதப்பெரியார்கள்.

தேவஞானமானவரிலே இவர்களாவது, குறை பிடிக்கிறதாவது! "நாணயத்தைக் காட்டுங்கள்; யாருடைய முத்திரை?"

"சேசாருடையது." அவரைத் தேசத்தலைவன் என்று ஏற்றுக்கொண்டால் வரிசெலுத்த ஏன் பின்வாங்க வேண்டும்?

"சேசாருக் குரியதைச் சேசாருக்கும், தேவனுக் குரியதைத் தேவனுக்கும் கொடுப்பது கடமை" என்று யேசு விடையளித்தார்

கேட்ட கேள்விக்குச் சரியான விடையும் பெற்று, மேலதிகமாகப் படிப்பினையும் பெற்றார்கள்.

(ஞாயிறுசுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதப்பகுதி

1. ஒருவியாபாரி முறையே எட்டுக் கலன், ஐந்துகலன், மூன்றுகலன் கொள்ளக்கூடிய மூன்று பாத்திரங்களை வைத்திருந்தான். எட்டுக்கலன் கொள்ளக்கூடிய பாத்திரம்நிறைய எண்ணெய் இருந்தது. அவனிடம் ஒருவன் நாலு கலன் எண்ணெய்தரும்படி கேட்டால் அவன் இம்மூன்று பாத்திரங்களையுங் கொண்டு எப்படிச் சரியாக அளந்து கொடுப்பான். விளக்குக.

2. இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும், மூலைக்குமூலை கூட்டினாலும் 135 வரவேண்டும். பாவிக்கப்படும் எண்கள் 15 தொடக்கம் 39 மட்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | | | | |
| | | | | |
| | | 27 | | |
| | | | | |
| | | | | 25 |

ஒருமுறை பாவிக்கப்பட்ட எண்ணை மறுமுறை பாவிக்கப்படாது.

வில்சன் எட்வேட்,
மாரீசன்கூடல், இளவாலை.

---

## வசனப்பகுதி

1. அந்தவலையை ஆற்றிலும் போடுவதில்லை, கடலிலும் போடுவதில்லை, குளத்திலும போடுவதில்லை. அது என்னவலை ?

2. அந்த மரத்துக்கு நுனியில் காயுமில்லை, அடியில் வேருமில்லை. அது என்ன மரம் ?

3. அந்த மீனைக் கறிசமைக்க எடுப்பதுமில்லை, கடையில் விற்பதுமில்லை, வலைகொண்டு பிடிப்பதுமில்லை. அது என்ன மீன் ?

ஜே. ஸ்ரனிஸ்லாவுஸ் குறேரா,
த. க. பாடசாலை,
குடாப்பாடு, நீர்கொழும்பு.

* * *

| | | |
|---|---|---|
| ப | | தா |
| | | |
| | | |
| மா | | த |

இதிலுள்ள பன்னிரு சதுரங்களிலும் பன்னிரு எழுத்துகள் கொண்ட ஓர்நாமம் இருக்கின்றது. கண்டு பிடியுங்கள்.

— J. A. G.

---

## சிஸ்றர் அசுந்தா

இம்மாதம் 7-ந்திகதியன்று சிஸ்றர் அசுந்தாவுக்குப் பரிசுத்தபிதா முத்திப்பேறுபெற்ற பட்டஞ் சூட்டவிருக்கிறார்.

அசுந்தா சகோதரி மரியாயின் பிரான்சீஸ்கன் மிஷனரிய கன்னியர் சபையைச் சேர்ந்தவ. இத்தாலி தேசத்தவ. ஏழைக் குடும்பத்தில் பல பிள்ளைகளில் ஒருவராய்ப் பிறந்தவ.

சிறுவத்திலே தேவபக்தியில் சிறந்து, தேவனை எல்லா விதத்தாலும் அதிக மதிகம் நேசித்தவ. நாட்டுப் புறத்தவ. இளமையிலே இவ தன் வீட்டிலும், தோட்டத்திலும் கடும்வேலை செய்ய வேண்டியவ வாயினு.

கன்னிகா அந்தஸ்தை விரும்பிய பொழுது மற்றச் சபைகளை விடப் பிரான்சீஸ்கன் மிஷனரிய சபையே இவவுடைய கவனத்தைக் கவர்ந்தது இவ கன்னிகா சீவியத்தைச் சொகுசான சீவியமாகத் தேடவில்லை. அதிகம் படிப்பில்லாதபடியால் மடத்தில் அற்பவேலைகளைச் செய்ய நியமிக்கப்பட்டா. கோழிகள், பால் மாடுகள், பன்றி முதலியவைகளைப் பராமரிக்க வேண்டிய கடமை இவவுக்கே கிடைத்தது. சில வேளைகளில் வருத்தமாயிருந்த சகோதரிகளைப் பராமரிக்கும் வேலையையும் பார்த்து வந்தா.

இவவுடைய சீவியத்தின் விசேஷம் என்ன ? மடங்களுக்குச் சிரேஷ்டராய் இருந்தவ வல்ல. பெரிய எழுத்தாளி அல்ல. பல அலுவல்களைப் பராமரித்துப் பிரசித்தி பெற்றவ வல்ல. ஆனல், **தனது கடமைகளைச் சுமுத்திரையாய்** அனுசரித்தவ. சிறிய புஷ்பத்தின் சிறிய வழியில் நடந்தவ. சிறிய வழியின் விரிவுரையாளி.

சீன தேசத்தில் மடம் ஒன்று அடியிட வேண்டியிருந்த பொழுது, இத்தாலியிலிருந்து சென்ற கூட்டத்துடன் இவவும் சென்று. சீனதேச மடத்தில சில காலமாக அனுதைச் சிறுவரைப் பராமரித்து அவர்களை யேசுவின் பாதையில் நடக்கப் பழக்கி வந்தா. அத்தேசத்தில் நடமாடும் விஷக் காய்ச்சல் கண்டு மாணித்தா. இவவுடைய சமாதியில் அநேக புதுமைகள் நடந்தேறின.

இவவுடைய படம் ஒன்றில், இவ தேவநற்கருணையை ஆராதித்தவணமாய் முழந்தாளிட்டிருக்க, அருகில் சீனச் சிறுவர் விளையாடிக் கொண்டிருக்கும் பாவனையாகச் சித்திரித்திருக்கிறது. அச்சித்திரம் இவவுடைய சீவியத்தைச் சுருக்கிக் கூறுகிறது.

சிஸ்றர் அசுந்தா நமக்கு அநேக புண்ணியங்களைப் படிப்பிக்கிறு. யேசுவின் சேவையில் பெரிது சிறுது என்றில்லை **தலைவர் பதவியும், தளங் கூட்டும் பதவியும் ஒன்றுதான்— தேவ ஊழியம்.** யேசுவின ஊழியத்தில் உத்தியோகம் விரும்புவது ஊழியத்திற்காக வல்ல, தற்பெருமைக்காக. சிஸ்றர் அசுந்தாவைப் போல் ஊழியத்தை விரும்பிச் கன்னிகா வாழ்க்கையை ஆசிப்போம். பிரான்சீஸ்கன் மிஷனரிய கன்னியர் சபை செழித்தோங்குக!

— M. J. M.

---

## உயிலங்குள மாணவர்களின் உல்லாசப்பிரயாணம்

தேவதாயாரின் புனிதவருட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணநகரிலே நடைபெற்ற ஞானேபதேசக் காட்சியையும், மரியாயின் சமாகமத்தையும் கண்டுகளிக்குமாறு எங்கள் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர் ஆசிரியைகளும், இதன் அயற்பாடசாலையாகிய நொச்சிக்குளப்பாடசாலை ஆசிரியரும் மாணவர் இருவருமாகச் சென்ற 8-10-54 மாலை 2மணியளவில் ஓர்பிரத்தியேக வான்மூலம் எங்கள் கட்டளைக் குரவர்தலைமையிலே புறப்பட்டு மூந்தப் பருத்தித்துறையைச்சேர்ந்து அர்ச். தொம்மை அப்போஸ்தலர் ஆலயத்திலே அன்றிரவைக் கழித்தோம அடுத்தநாள் அங்கிருந்து புறப்பட்டுப் போய்ப் பலாலி ஆகாயவிமானநிலையத்தைப் பார்வையிட்டுப் பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிப் பொருட்காட்சி நிலையத்தைஅடைந்து காட்சியைக் கருத்துறப் பார்த்து, அடுத்த 10-ந்திகதி ஞாயிறுவாரம்முழுவதையும் அங்குதானே கழித்து மரியாயின்சமாகம மகாசுற்றுப்பிரகாரத்திலும், அமைதியான ஞானமுயற்சிகளிலும் கலந்து, மறுநாள் காங்கேசன் துறைசென்று மின்சாரநிலையம், சீமெந்துத்தொழிற்சாலை என்பவற்றைக் கண்ணுற்றோம். அதன்மேல் கீரிமலையை அடைந்து நீராடி மத்தியானப் போசனஞ் செய்துகொண்டு சிறிதுவேளை இளைப்பாறியபின் மாதகல், பண்டத்தெருப்பு, பாத்திமாகிரி, இன்னும் பூலோகமோட்சம் போலவிளங்கும் தோலகட்டிச் செபமாலைத்தாசர் ஆச்சிரமம், அங்குள்ள அலங்காரபூங்கா ஆகியவற்றையும், மற்று மிடங்களையும் பார்த்து ஆனந்தித்துக்கொண்டு மீண்டும் யாழ்ப்பாணநகரை அடைந்து இரவை அங்குதானே கழித்துக்கொண்டு எமதுசுயபதியை நோக்கிப்புறப்பட்டுப் 12-ந் திகதி மாலை 4-30மணியளவில் இங்குவந்துசேர்ந்தோம். இவ்விதபயன் [illegible] எமதுபாடசாலை நடத்தியது இதுவே முதன்முறையாகும். இதனை நடத்துமாறு எம்மைத்தூண்டிப் பேருதவி புரிந்த எமது கட்டளைக்குரவர் வண. எச். மொறேசுவாமிகளுக்கும், தலைமைஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கும், ஏனைய ஆசிரியர், ஆசிரியைகளுக்கும மாணவர்களாகிய நாம் நன்றிபாராட்டுகின்றோம்.

மாணவன் — பி. பார்வோன்

---

## செபமாலைமாதா திருப்பதி யாத்திரை

மட்டக்களப்பு—வதுளைப்பாதையிலே 28 மைலுக்கப்பால் கோயில்கொண்டிருக்கும் புல்லுமலை, பரிசுத்தசெபமாலை நாயகியின் திருவருளைவேண்டித் தாண்டவன்வெளிப் பரிசுத்த காணிக்கை மாதாஆலய உதவிக்கட்டளைக் குரவர் வண. நோவட் ஒக்கஸ்சுவாமியவர்கள் தலைமையில் 17-9-54-இல் நடைபெற்ற திருயாத்திரையிலே 65 பேர் பங்குபற்றினர். யாத்திரிகர்கள் கால்நடையாக அன்றுமாலை 3-30 மணிக்குத் திருச்சுரூபத்தை ஆண்கள் பெண்கள் தாங்கிச்செல்ல, செபமாலையாலும், மலர்மாலையாலும் மாதாவை வாழ்த்தி அணிவகுத்துச் செல்ல, 18-9-54 காலை 4மணிக்கு உறுகமத்தை அடைந்தனர். அங்கு திவ்விய பலிபூசை நிறைவேறியது. காலைப் போசனம் முடிந்ததும் யாத்திரை மறுபடி ஆரம்பமாகிப் 10-30 மணிக்குத் திருப்பதியை யடைந்ததும் சகலரையும் தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கும் செபஞ்சொல்லித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டது. 19-9-54 காலை யாத்திரிகர்கள் தனித்தனியாக ஞானப்பூச்செண்டுகளை மாதாவுக்குப் பாதகாணிக்கைவைத்தபின் திவ்வியபலிபூசை ஒப்புக்கொடுக்கப் பெற்றுத் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டது. மட்டக்களப்பு, அர்ச். மரியநாயகிஆலய கட்டளைக்குரவர் வண. ரி. ஆறன்ட்ஸ், தன்னமுனை அர்ச். சூசையப்பர்ஆலய கட்டளைக்குரவர் வண. ஜே. அலெக்சாண்டர் ஆகிய குரவர்கள்இருவரும் திருப்பதியில் யாத்திரிகர்களைத் தரிசித்தனர். ஈற்றில் வண. நோவட் ஒக்கஸ் சுவாமியவர்களுக்கு நன்றியுரை கூறிக்கொண்டு பஸ்ஸில்புறப்பட்டு வீடுசேர்ந்தனர். "வாரீர் புகழ்வோம் திருமாதாவை"

— எல். எஸ். இராஜா.

---

## கிறீஸ்து இராசா திருநாள்

பணிப்பிட்டித் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் கிறீஸ்துஇராசாவின் ஆலயத்தில் சென்ற 31-10-54 ஞாயிறுவாரம் இத்திருநாள் மிகஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. வண. உதவிக் கட்டளைக்குரவரால் முந்திய தினமன்று மாலைஆராதனையும், திருநாளன்று காலை 8-30 மணிக்குப் பாடற்பூசையும் அர்ச். தெரேசா பாடகர் குழாம் உதவிபுரிய நடந்தேறின. பூசையின்போது கிறீஸ்துஇராசாவின் மகத்துவத்தைப்பற்றி ஓர்அரிய பிரசங்கம் செய்யப்பட்டது. திவ்வியபூசையின்பின் சற்பிரசாத ஆசீர்வாதமும், திருச்சுரூப சுற்றுப்பிரகாமும் நடைபெற்றுப் பெருந்திரளானேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டதும் திருநாள் இனிதேமுடிவெய்தியது.

— S. B.

---

## பிரிவுஉபசார விழா

புங்குடுதீவுச் சுகாதாரபரிசோதகர் நா. சந்தனராசா அவர்களுக்குச் சென்ற 26-10-54 செவ்வாயன்று இங்குள்ள கத்தோலிக்கபாடசாலை ஆசிரியர், மாணவர்களால் ஓர்பிரிவுஉபசார விழா நடத்தப்பட்டது. அவ்வமயம ஆசிரியர் அ. பற்றிக் அவர்கள் மலர்மாலை [illegible] யோ. மரிய லேயோன் எனும் மாணவனால் பிரிவுஉபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. மாணவி சி. பவுலீனம்மா, மாணவன் க. சவிரிமுத்து, ஆசிரியர் சு. பிரான்சீஸ் சேவியர், தலைமைஆசிரியர் எம். கே. கே. அருட்பிரகாசம் என்பவர்கள் பரிசோதகரின் அயராத உழைப்பையும், பிறவிசேஷங்களையும் எடுத்துக் காட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். கடைசியாகச் சுகாதாரபரிசோதகர் தம்க்குஅளிக்கப்பட்ட பிரிவு உபசாரத்தைத் தம்மால் என்றும் மறக்கமுடியாதென்றுகூறிச் சகலர்க்கும் தமதுநன்றி தெரிவித்ததும் விழா இனிதேநிறைவேறியது.

— பி. ச.

---

## கிறீஸ்துஇராசா திருநாள்

முல்லைத்தீவுப் பட்டினத்திலுள்ள இருகோவில்களையும்சேர்ந்த வாலிபர் கூட்ட அங்கத்தவர்களாலே சென்ற 31-10-54 ஞாயிறுவாரம் கிறீஸ்து இராசாதிருநாள் பத்திச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முதல்நாள் சனிக்கிழமை தேவயாதாவின்கோவில் இயற்கை, செயற்கை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, மின்சாரதீபாலங்காரமுறுவிளங்க வேஸ்பர்பாடப்பட்டது மறுநாட்காலை 7-30 மணிக்குத் திருநாட்பூசை நிறைவேறியது. திரளானபக்தர்கள் அதற்குச் சமுகமளித்திருந்தார்கள். பூசைமுடிவில் வண. கட்டளைக்குரவர் கிறீஸ்துஇராசாவைப் பற்றி அரியதோர்பிரசங்கம் செய்தனர். சாயந்தரம் அலங்கரிக்கப்பட்ட கோவில்வீதியூடே செப ஓசைமத்தியில் கூட்டஅங்கத்தவர்களால் கிறீஸ்து இராசா திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுசெல்லப்பட்டுத் தேவநற்கருணைஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதேமுடிவெய்தியது.

— நிருபர்

---

## நாடு சங்கதிகள்

● இந்தியாவிலே ஜோதிபுரி மன்னரின் ஊழியர்களில் ஒருவரான பிரிகேடியர் ஜாபர்சிங்என்பவர் இறந்தமையால் உண்டானதுயரைச் சகிக்கமுடியாமல் அவருடையமனைவி தக்குராணி உடன்கட்டை ஏறினுள். நேரம்கழித்துப் பொலிசருக்குத் தகவல்கிடைத்தால் அவர்களால் ஒன்றும்செய்யமுடியாமல் போயிற்றும்.

● கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள ரூமேனியாவின் கம்யூனிஸ்த தலைவரும், அந்நாட்டின் முன்னுள் வெளிநாட்டுமந்திரியுமான வசிலே லூக்கா என்பவர் புக்காறெஸ்ற்நகா இராணுவ நீதிஸ்தலம் ஒன்றுலே மரணதண்டனை விதிக்கப்பட் டிருக்கின்றுர். இவர் முன்னே அந்நாட்டின் உதவிப்பிரதமராயும், நிதிமந்திரியாயும் இருந்தவர்.

● ஆஸ்திரிய சிம்மாசனத்துக்கு உரிமைக்காரரான ஓட்ரோ வொன ஹாப்ஸ்பேர்க் பெருங்கோமகனுரின் இரட்டைக்குழந்தைகளான இரு பெண்குழந்தைகள் சமீபத்தில் ஜேர்மனிதேச உவேஸ்பேர்க்நகரிலே போலிகோஸ்கி அதிமேற்றிராணியாரால் ஞானஸ்நானம் அருளப்படலாயின. அதற்கு உபயோகிக்கப்பட்ட தண்ணீர் ஆஸ்திரியாவிலே மரியாசெல் எனுமிடத்திலுள்ள மரியாயின் தேசியதிருசேத்திரத்திலிருந்து கொண்டுபோசப்படலாயிற்று.

● சிகறெற்புகைத்தல் தீர்க்கமாகவே சுகத்திக்குக் கேடானது ; ஏனெனில், அதுசுவாசப்பைகளில் 'கான்சர்' எனப்படும் புற்றுநோயை உண்டு பண்ணுகிறது ; எனதுஅபிப்பிராயத்தை உலகமுழுவதிலுமுள்ள வைத்தியர்கள் ஏற்றுக்கொள்ளுகிறுர்கள்" என்று போசன—போஷணை விஷயமாய் 25 புத்தகங்கள்வரை எழுதியுள்ள திரு. ஜெவ்விறே ஹட்சன் அவர்கள் கூறுகின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வர்த்தமானம்

## கிரகங்களுக்குப் பிரயாணம்

ஆகாயவெளியிலே மனிதர் செயற்கைமுறையான உபக்கிரகங்களை அமைத்து, அவற்றிலிருந்து வெளிஸ்நகர இடைவெளிக் கால்வாய்களில் பாவிக்கப்படும் நீளமான ஒடுங்கிய வள்ளங்களில் பயணஞ்செய்து நமதுசூரிய மண்டல வெளிஸ்நகர் ஒன்றையும் ஆக்கிக்கொள்ளும் காலத்தைத் தாம்எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக ஓர் அமெரிக்க வானசாஸ்திரியான யேசுசபையைச்சேர்ந்த வண. பிரான்சிஸ் ஹெய்டன் சுவாமியார்கூறுகின்றார். ஆனால், ஆராய்ச்சியாளரான ஆகாயப்பிரயாணிகள் தங்கள் பிரயாணங்களை முடிக்கும்போது, தாங்கள் பழகாத நூதன காரியங்களை எதிர்கொள்வார்களென அவர் எச்சரிக்கின்றார். "புதனும், நமதுசந்திரன்தானும் முற்றாகவே பரமாணுமண்டலத்தைக் கொண்டனவன்று; சுக்கிரன் நீராவியெழும்பும் அத்துணைசூடான மேற்பரப்பைக் கொண்டிருக்கிறது; மேலும் இருந்தைப்பஸ்பமுள்ள பரமாணுமண்டலத்தைக் கொண்டிருக்கிறது; செவ்வாய் தண்ணீரையோ, அன்றேல் பிராணவாயுவையோ முற்றாகக் கொண்டில்லை; வியாழனிலும், சனியிலும், மற்றும் இராட்சதகிரகங்களிலும் இந்தஆகாயவெளிப்பிரயாணிகள் குளிரிலுல்உறைந்த நவச்சாரமும், பூச்சிய (0) அளவிலும் நூறுபாகைக்கு மேற்பட்ட அதிகங்குறைந்த சீதளநிலையில் ஈரத்தன்மையற்ற கடினமான பனிக்கட்டியாக மாறிய சதுப்புநில ரசாயன வாயுவும் பரந்தவெளிகளிலே நடக்கவேண்டியிருப்பதைக் கண்டுகொள்வார்கள்; இவைகள் அறியப்படாத எல்லைகளுக்கப்பால் நேரக்கூடிய அபாயங்களைப்பற்றி மாலுமிகளை எச்சரிக்கும்படியாய் அவர்கள் தூபூகோளப்படங்களின் ஓரங்களிலே புராதனமாலுமிகள் வரைந்தவைகளைப்போன்ற வீண்கற்பிதங்கள் அல்ல; இவைகள் விஞ்ஞானரீதியாய்க் கண்டறியப்பட்ட உண்மைகள்; நாமே நம்மைத் தகுதியாக்க முடியாத நிலைமைகளே இவைகள்; பிறகிரகங்களில் நாம் உயிர்வாழவே முடியாது" என்றும் சுவாமியார் கூறுகின்றார்.

## பறக்கும் தட்டுகள்

சென்ற ஒருமாதகாலமாகப் பறக்கும் தட்டுகளைப்பற்றிய விசித்திரசெய்திகள்பல நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. பிரான்சிலே ஒருவர் பறக்கும்தட்டில் வந்திறங்கிய மனிதர்களுடன் பிரான்சியமொழியில் பேசினாரென்பது ஒருசெய்தி. பறக்கும்தட்டில் வந்திறங்கிய மனிதர்கள் நாயைக்கண்டு பயந்தோடித் தட்டில் ஏறி மறைந்தார்களென்பது மற்றொரு செய்தி. வேறொருமுறை பறக்கும் தட்டில் வந்தவர்கள் ஒருவரின் பேனாவை வாங்கிக் காகிதத்திலே ஏதோ விளங்கமுடியாத சின்னங்கள் வரைந்துவிட்டுச் சென்றார்களென்பது இன்னும் ஒருசெய்தி. தற்போது இந்தியாவிலே விழுப்புரத்துக்கு அருகிலிருந்து ஒருசெய்தி வந்திருக்கிறது. திரு. தேவுஜி பிரேம்ஜிஎன்பவர் தனதுநிலத்திலே இரவில்தங்குகையில் பறக்கும்தட்டொன்றைப் பார்த்தாராம். அதிலிருந்து இரண்டுமனிதர்கள் இறங்கிவந்து விளங்கமுடியாத மொழியில் ஏதோபேசினார்களாம். போட்டோபிடிக்கும் பெட்டி ஒன்றையும் அவர்கள் வைத்திருந்தார்களாம். சிறிதுநேரம் காட்சியளித்துவிட்டு அவர்கள் தட்டில்ஏறிப் பம்பரம் சுற்றுவதுபோலத் தட்டைச் சுழற்றிச் சுழற்றி மறைந்தார்களாம். இந்தச் செய்திகளைக்கேட்டு, வேற்றுலகவாசிகள் பூமியின்மீது படையெடுத்து வருகிறார்களென்ற திடீர்முடிவு செய்துகொள்ளத் தேவையில்லை. அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானிபோன்ற நாடுகள் புதியஆகாயப்படை ஆயுதங்களைத்தயாரித்து, அவற்றைப் பரீட்சைசெய்து பார்க்கின்றனவென்பதுஓர்உண்மையே. பறக்கும்தட்டில்வந்தவர்கள் பிரான்சியமொழி பேசியதும், நாயைக்கண்டுஓடியதும, போட்டோப்பெட்டி வைத்திருந்ததும் அவர்கள் வேற்றுலகவாசிகளென்பதற்குச் சான்றுகள் அல்ல. திரு. தேவுஜிக்குப் பிரான்சியமொழி தெரியாதென்று பறக்கும்தட்டில் வந்தவர்கள் எளிதில் கண்டுபிடித்துவிட்டார்கள்போலும்!

(ச. வி.)

## புதிய பிரயாணக்கப்பல்

பிரித்தானியிலே இதுவரை கட்டப்பெற்றுள்ள பிரயாணக்கப்பல்களிலெல்லாம் அதிகசெலவுசெய்து கட்டப்பட்ட கப்பல் பி அன்ட் ஒ கம்பெனியைச் சேர்ந்த ஐபீரியாஎனும் கப்பலேயாகும். முப்பதினாயிரந்தொன் நிறைகொண்ட இந்தக்கப்பலைக் கட்டிமுடிக்க ஏற்பட்ட செலவு 67 லட்சத்து 50ஆயிரம்பவுண். யுத்தத்துக்குமுன் இராணிமேரிஎன்ற கப்பலைக்கட்ட ஏற்பட்டசெலவு 50 லட்சம்பவுண். 1939-ம் ஆண்டு யுத்தந் தொடங்கியபின் அதிகம் விரைவிலே கட்டிமுடிக்கப்பட்டமையால் இராணி எலிசபேத் எனும்கப்பலுக்கு ஏற்பட்ட செலவு 60 லட்சம்பவுண். 83,000 தொன்நிறையான இந்தக்கப்பலைக்கட்டத் தொன்ஒன்றுக்கு 72 பவுணே செலவுபிடித்தது. ஆனால், முப்பதினாயிரம்தொன்நிறையான ஐபீரியாஎன்ற இந்தப்புதியகப்பலைக்கட்டத் தொன் ஒன்றுக்கு 225 பவுண் செலவுபிடித்துள்ளது. இது 1,400 பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடியது. சாமான்களைஏற்றிச்செல்ல இதிலே மூன்று லட்சம்கனஅடி விஸ்தீரணமான இடமிருக்கின்றது.

## வத்திக்கானும் பஞ்சாங்கதிருத்தமும்

தற்போது பொருளாதார – சமூக சபையிலே ஆலோசனைக்கு வந்திருக்கின்ற பஞ்சாங்கதிருத்த கருமத்தைத் தான்ஆதரிப்பதில்லையென்று ஐக்கிய நாடுகளின் காரியதரிசி காரியாலயத்துக்கு வத்திக்கான் தெரிவித்திருக்கின்றது. பஞ்சாங்கதிருத்த கருமத்தை வத்திக்கான் ஆதரிக்குமென உலகில் ஏற்பட்டுள்ள மனப்பதிவைச் சிதறப்பண்ணும் நோக்கமாகவே றோமைநகரிலிருந்து இதுசெய்தி அனுப்பப்படலாயிற்று. "எல்லாப் பஞ்சாங்கதிருத்தத்தையும் வத்திக்கான் எதிர்ப்பதில்லை; ஆனால், இம்முறை ஐக்கியநாடுகளின் இந்தக் குறிப்பிடப்பட்ட பஞ்சாங்க திருத்த கருமத்தை அதுஆதரிப்பதில்லை" யென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கதிருத்தம் அதிகமதிகமாக ஆசியநாடுகளாலே ஆதரிக்கப்படுகின்றது. ஆனால், அமெரிக்க ஐக்கிய தேசத்தாலும், பிரித்தானியாலும் எதிர்க்கப்படுகிறது. பஞ்சாங்கம் திருத்தப்பட வேண்டுமெனச் சிலநாடுகள் நெருக்கித்தூண்டவேண்டுமெனக் கருதப்படுகிறது. உதாரணமாக, இந்தியா தற்காலம் சுமார் 14 அல்லது 15 பஞ்சாங்கங்களைக் கொண்டிருக்கிறது. ஆயின், இவற்றில்ஒன்றாவது சட்டதிட்டமானவை அன்று. மற்றோர்பால் வைதிக யூதர்கள் பஞ்சாங்கதிருத்தத்தைப் பலமாக எதிர்க்கின்றார்கள். ஏனெனில், ஒவ்வோர் ஏழாம்நாளிலும் ஓய்வுநாள் வரவேண்டுமென மோயீசனின்சட்டம் கூறுகின்றது. வருடந்தோறும் ஒவ்வோர்தினமும், லீப்பியர் வருடங்களிலே இருதினங்களும் திருத்தப்படும் பஞ்சாங்கத்தில் நிரைகடந்து போகின்றன. அதனால், யூதர்களின் ஓய்வுநாள் மாற்றத்துக்குள்ளாகின்றது. தற்போது மேற்குலகில் பாவனையிலிருந்து வருகின்ற பஞ்சாங்கம் 1582-ம் ஆண்டு 13-ம் கிறகோரியார்எனும் பாப்பானவராலே திருத்தியமைத்துப் பிரகடனஞ்செய்யப்பட்டது.

## திருமணம்

மானிப்பாய்வாசரும், வேளாண்மரபிலுதித்தவரும், ரீமேக்காரயிருந்தவருமான திரு. ஏ. சின்னையா அவர்களின் புதல்வரும, தற்போது வறகப்பொல ஒயில்மென்ற் ஸ்ரோர் மனேஜருமான திருவளர்செல்வன் எஸ். கே. பொனிப்பாசுக்கும், உயர்குலவேளாண் குலத்தவரும், கந்தர்மடவாசருமான மயில்வாகனம அருளம்பலம் அவர்களின் ஏகபுதல்வனும், ஆசனக் கோவில் உபதேசியாராய்க் கடமையாற்றிப் பட்டணம்முழுவதும் நன்குபோய் அறியப்பட்டவரும், தற்போது சென் வின்சென்ற் டி போல்தருமசபை அர்ச். சூசையப்பர்பந்தியின் காரியஸ்தருமாகிய உபதேசியார் திரு. ஏ. மிக்கேற்பிள்ளை (சுப்பிரமணியம்) அவர்களினதும், வேளாளன் தனிநாயகம் முதலிமரபில்உதித்த மரியம்மா பாக்கியத்தினதும்கனிஷ்டபுத்திரியாகிய திருவளர்செலவி யோசேப்பின் மேரி மெற்றில்டா பேபிக்கும் சென்ற 30-10-54 சனிக்கிழமைகாலை பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேறியது. அவ்வேளை குரவர்அவர்கள் புதியதம்பதிகளுக்கு அரியபுத்திமதிகள்உரைத்து ஆசிகூறினார். பூசையின்பின் தம்பதிகள் மணமகளின் இல்லத்துக்கு மோட்டார்ரதரூடராய் அழைத்துக்கொண்டு போகப்பெறவே, அங்கு வரவேற்புபசாரம் அமைதியாக நடந்தேறியது. மணமக்கள் பல்லாண்டுவாழ்க!

அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



கேட்டநன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

பண்டாரவளை: ஜே. அந்தோனியம்மாள் 1-00, சூசைமரி பீற்றர் 5-00 — கல்கமுவா: வி. அந்தோனிப்பிள்ளை 2-00, வி. சந்தியாப்பிள்ளை 3-00, எம். எஸ். அந்தோனிப்பிள்ளை -50, எஸ். சூசைப்பிள்ளை 3-50, ரி. ஜேட்றூட் 1-00, எம். ஆர்தியான் 1-00, கே. வஸ்தியான் 1-00, எஸ். செபஸ்ரியாம்பிள்ளை 1-00, வி. யோசேப்பு 1-00, ஏ. டோமினிக் 5-00, ஜே. ஆவிசுப்பிள்ளை 2-00, அந்திரே மரியை 3-00, ஆர். சுவக்கிம் 1-00 —வட்டவளை: ரி. அன்ரனி குரூஸ் 4-00— சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 20-00— கொஸ்லான்டோ: எஸ். கே. மரியாம்பிள்ளை 10-00 — செட்டிகுளம்: ரி. பஸ்ரியாம்பிள்ளை 5-00, ஜே. இராயப்பு 10-00, வி. சவிரிமுத்து 20-00 — அக்கரபற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 3-00, சி. எம். டயஸ் 2-00—கற்பிட்டி: எஸ். பி. நோகீஸ் 5-00, எஸ். மெற்றில்டா கொஸ்தா 1-00 — டிம்போடிரு: பி. எவ். சூசைப்பிள்ளை 2-00 — முள்ளிக்குளம்: ஏ. பி. இன்னாசியா கூஞ்ஞ 2-00, எம். செபஸ்ரியன் சில்வா 3-00, மிசெஸ் ஏ. கபிரிகேற்பிள்ளை 2-00, மிசெஸ் ஏ. சுவக்கிம் கூஞ்ஞ 2-00, மிசெஸ் சீமோன் லம்பேட் 1-00, கே. வலத்திசார் கூஞ்ஞ 1-00, எஸ். பறுனாந்து 1-00, எஸ். ஞானம்மா குரூஸ் -50, சந்தியா வரோணிக்கா கூஞ்ஞ 5-00, மிசெஸ் பிரான்சீஸ் 1-00—அரிப்பு: எஸ். காணிக்கை குரூஸ் 6-00—மறிச்சுக்கட்டி: எஸ். ஞானம்மா குரூஸ் -50 — இற்றாலை: பிறுங் அன்ரன் 8-00, மிசெஸ் பிறுங் அன்ரன் 2-00 — அப்புத்தளை: எஸ். எம். யோசேப் 15-00 — வறியப்போலா: டி. ஜி. டேவிற் 2-00—கொழும்பு: கே. அந்திரேயாஸ் 3-00, ஓர்உபகாரி 1-00, மிஸ் ஏ. அந்தோனிப்பிள்ளை 5-00 — கேகாலை: ஏ. யுவக்கிம் 5-00 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 2-00, பி. கபிரிகேற்பிள்ளை 2-00—வவுனியா: பி. ஜே. சிறில் 2-00—அம்பிற்றியா: எம். டானியல் 1-00 — கொற்றகல: சி. எஸ். அருளப்பு 1-00 —பூக்குளம்: மிசெஸ் சிமியோன் 1-00— கோலசிலாங்கூர்: எஸ். யோசேப்பு 13-00 —கல்ஞட்டி: எஸ். எம். பெமியான் 1-00 —உடப்புசலாவை: மிசெஸ் எஸ். வி. பீற்றர் 1-00 — மண்டைதீவு: அன்னம்மா இம்மனுவேல் 2-00 — நாவற்காடு: ஏ. அந்தோனிப்பிள்ளை 1-00 — தலவாக்கொலை: அன்ரன் இ. லீயோ 10-00 — புத்தளம்: பிறுங் எல். லீயோ 2-00 — கட்டைக்காடு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 3-00—வற்றாலை: ஏ. செபஸ்ரியான் 5-00 — நுவரேலியா: எல். ரி. எஸ். பஸ்ரியான் 6-00 — நாஞட்டான்: டபிள்யு. ஜே. நவரட்ணம் 5-00—போளவத்தை: எம். பி. போல் 6-00—யாழ்ப்பாணம்: எம். சின்னப்பு 1-00, ஏ. பிரான்சீஸ்பிள்ளை 4-00 — டிக்கோயா: எம். பஸ்ரியாம்பிள்ளை 5-00.

| The Director,<br>St. Joseph's<br>Conference.<br>Bishop's House.<br>JAFFNA. | சென் வின்சென்ற் டி<br>போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன<br>மாளிகை<br>யாழ்ப்பாணம். |
|---|---|

● யுத்தத்திலே எந்தவிதமான தாங்கியையும் பலமற்றதாக்கித்தோற்கடிக்க வல்ல புதிய ஆயுதம்ஒன்றை—அதாவது 106 மிலிமீற்றர் மடக்குத் துப்பாக்கி ஒன்றை அமெரிக்கவரசு கண்டுபிடித்துச் செய்திருக்கிறது. இது பாவனைக்குவரக்கூடிய எந்தத் தாங்கியினதும் அதிகம் கனதியான கவசத்தையுமே ஊடுருவிச்சென்று பரிகாசமாக்கத்தக்கதாம்.

● பிரான்சிய போர்வீரர்களிலெல்லாம் தற்போது அதிகம்குறுகியவன் வடபிரான்சிலே ஹான்மொண்ற் எனுமிடத்தைச் சேர்ந்தவனான அல்பிறெட் கொலெற்எண்பவனே. இவன் 2 அடி 8 அங்குல உயரமுடையவன். 1935-ம் ஆண்டு கார்த்திகைமாதம் பிறந்தான். சமீபத்திலேயே இவன் பட்டாளத்தில் சேர்ந்துகொண்டான்.

● இருபது வருடங்களுக்குப் பின்னர் மறுபடியும் சென்னையின் கிழக்குப் புறக்கரையிலே அடுத்தவருடஆரம்பத்தில் முத்துக்குளிப்பு நடைபெறவிருக்கின்றது. சமீபத்திலே சென்னைஅரசாங்க கடற்தொழிற்பகுதியார் பரிசோதனைநடத்தியதன்விளைவாகத் தூத்துக்குடிக்கப்பாலுள்ள முத்துச்சிப்பிப் பார்களிலே நன்றாகவளர்ந்த சிப்பிகள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பிறேக்நகர் திவ்வியபாலக யேசுவினிடம் நான்இரந்துகேட்டுவந்தபடி உதவி நான் எதிர்பார்த்ததிலும் அதிகமாகக் கிடைக்கலாயிற்று. தாழ்மையாக நன்றி தெரிவித்து எனது நேர்த்திப்படி, இதனைப் பிரசுரஞ் செய்கிறேன்.

— ஓர் பக்தன்

* * *

யேசுவின் திரு இருதயத்தின் இரக்கத்தினாலும், பரிசுத்த பாத்திமாமாதாவின் உதவியினாலும், பாலகயேசுவின் அர்ச். சின்னத் தெரேசம்மாள், ரீத்தம்மாள், அந்தோனியார் இவர்களுடைய இடைவிடா வேண்டுதல்களினாலும் என்மன்றாட்டுக்களிற்சில அனுகூலமானபடியால் என் நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். இன்னும்நான் கேட்டுக்கொண்டுவருகிற வேறுவிசேஷ சகாயங்களும் கிடைக்கும்படி பரிசுத்தபாத்திமா மாதாவையும் சதாசகாயமாதாவையும் அர்ச். சின்னத்தெரேசம்மாளையும், ரீத்தம்மாளையும், அந்தோனியாரைம் கெஞ்சிமன்றாடுகிறேன்.

ஊறணி, R. R.—R. M.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 4-1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org